கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(23.12.2018 - 23 மார்கழி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 198, 20 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

ඥාන ඕලි


GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

வாசகர்கள்,
எழுத்தாளர்கள்
அனைவருக்கும் கிறிஸ்து
பிறப்பு பெருவிழா மற்றும்
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

# பகிர்வின் அடையாளமே மனுமகன் பிறப்பு

## அவர் வழி செல்வதுதான் மானிடத்தின் சிறப்பு



## இயேசு எம்முள் பிறந்துவிட்டால்

உன்னதத்தில் வீற்றிருக்கும்
உன்னத தேவனே
உம்மை விட உயர்ந்த தெய்வம்
உலகில் இல்லையே

தொடக்கத்தில் வார்த்தையாய்
வெளிப்பட்டீர் - இன்று
தொடர்ந்தும் எம்முடன் இருக்க
மனித உருவெடுத்து
குழந்தையாய் பிறந்துள்ளீர்.

மன்னன் நீர் மாளிகையில்
பிறப்பீர் என எண்ணியிருந்தோம்
மாளிகை எதற்கு, ஏழ்மையின்
உருவிலேயே பிறப்பேன்
நான் என்றீர்.

இயேசுவே, உம்மை நாம் பாட
உம் புகழ் பறைசாற்ற
வேண்டுமே தினமே,

இருள் சூழ்ந்த தொழுவத்திற்கு
விண்மீனோ ஒளி தந்தது,
மின்மினியோ கண்சிமிட்டி
அழகு தந்நது.
வானவர் கீதத்தால்
இடையர் நடனத்தால்
இராஜாக்களின் வரவினால்
ஒதுக்கப்பட்ட இடமோ
இன்று வரையிலும்
போற்றப்பெறுகின்றது.

இயேசுவே, உம் வரவினால்
அசுத்தமான இடம்
தூய்மையானதைப் போல
இருளான பிரதேசம் ஒளி
பெற்றதைப் போல
எம் மனமும் தூய்மைப் பெறும்
நீர் எம்முள் பிறந்துவிட்டால்.

ஆக்கம்
P.M. மேரி பெனடிக்கா
பென்ரித், அவிசாவளை.

## கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் நத்தார் வாழ்த்துச் செய்தி - 2018

நத்தார் என்பது, இறைவனாம் ஆண்டவர் மனுவுருவெடுத்து அவதரித்து முழு மனித குலத்திற்கும் வெளிப்படுத்திய உயரிய நன்மைத்தனமாகும். விண்ணகத்தில் இருந்து, மண்ணுலகிற்கு வந்திறங்கி மனிதவுரு எடுக்கவும், மனித குடும்பத்துள் வளரவும், விருப்பம் தெரிவித்து, மனித வாழ்வின் உயரிய நிலையையும் அதிலுள்ள மதிப்பையும் அவர் எமக்கு வெளிப்படுத்துகின்றார். எனவே, நத்தார் பெருவிழா மனித சமுதாயத்தின் உயரிய பெருவிழாவாகும்.

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பது மிகவும் சவாலான காலகட்டத்திலாகும். மனித வாழ்க்கையை பாதுகாப்பதற்கு முரணாக, அதை சீர்குலைப்பதற்கான உலகப் போக்கே இன்று உருவாகிக்கொண்டுள்ளது. நத்தாரையும் வியாபார நடவடிக்கைகளுக்கான வாய்பளிக்கும் விழாவாக மாற்றியமைக்கும் பொருளாதார நடைமுறையாக்க பலர் முயலுகின்றனர்.

இதன்மூலம் உருவாவது வாழ்க்கையை வளமூட்டும் சந்தர்ப்பங்கலன்று. மாறாக அவற்றை சீரழிக்கின்ற, பகிரங்கமாக புறக்கணிக்கும் கலாச்சா-ரங்கள், கொள்கைகளையே தோற்றுவிக்கும். நாளுக்கு நாள் அதிகரிக்கும் மனிதக் கொலை, கருக்கலைப்பு, இனப்பெருக்க கட்டுப்பாட்டு முறைகள், போதைப்பொருள் நடவடிக்கைகள் போன்றன இதன் பிரதிவினைகளே. இப்பட்டியலில் மனித உடல் உறுப்புக்களை விற்கும் நடவடிக்கைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இறைமகனானவர் மனுவுருவெடுத்து இவ்வுலகில் அவதரித்தமையை எண்ணுகின்றபோது, அவர் எம்மில் வைத்துள்ள அன்பும் சகோதரத்துவ மனப்பாங்கும் எவ்வளவு உயரியது என்பது வெளிப்ப-டுத்தப்படுகின்றது. திருவிவிலியத்தில் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது “கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” (பிலிப்பியர் 2:6-7)

நத்தாரின் உண்மையான அர்த்தத்தை விளங்கிக் கொண்டு, லௌகீக போக்கிற்கு அடிமையா-காமல் இப்பெருவிழாவை சிறந்த முறையில் நாம் கொண்டாட வேண்டும். மனித நேயத்தை கொண்டு, உண்மையான மனமாற்றத்துடன், மனிதர்களை மதித்து, இயற்கைக்கும், சூழலுக்கும் தீங்கிளைக்காத வண்ணம் மதிநுட்பத்துடன் செயற்படுவோம். சிறந்த மதக் கொள்கைகளோடு, மறையை பரப்பும், நத்தாரின் உண்மையான அர்த்தத்தை முண்ணுணர்ந்து அதன் இனிமையை அனுபவிப்போம்.

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்.**
**2018**

**இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா (தி.பா 96)**

## நத்தார் சிறப்பிதழ்





# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நத்தார் செய்தி – 2018

நத்தார் என்பது, இறைமகனான இயேசு கிறிஸ்து பெத்லகேம் எனும் ஊரில் இறைவனின் அன்புடன் மனித வரலாற்றில் அவதரித்தமையாகும். இந்த மறைபொருளின் மூலம் கடவுள் மனித குலத்திற்காக அவரது பெருகிய அன்பின் ஆழத்தை நமக்கு வெளிப்படுத்தினார். “தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்” (யோவா 3:16)

இயேசுவினது வருகை மூலம் அவரது வாழ்வை இவ்வுலக மக்களுடன் பகிர்ந்து, அவர் தனித்து நின்று எமது நிறைவுக்காக அவரை அர்ப்பணித்தார். (யோவா 10:10) இவ்வாறு இயேசு நம்மை பின்தொடர்ந்து கொண்டே நம்முடன் வசிக்கின்றார். இயேசுவுக்கு இம்மானுவேல் எனப் பெயர் கொடுக்கப்பட்டது. “கடவுள் நம்மோடு இருக்கின்றார்” என்பதை நினைவுறுத்தவே. எனவே, எமது நத்தார் கொண்டாட்டங்களானது எமது இறந்தகால நிகழ்வுகளை நினைவு கூறுவதாக இருக்காது. இது வாழ்வின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, எமது சமூகத்தில் முழு மனதுடன் சாட்சிய வாழ்வு வாழ்வதைப் பற்றி ஆழமாக புரிந்து கொள்ளும் கொண்டாட்டமாகும்.

நத்தார் பண்டிகையானது, இயேசுவை எமது வாழ்க்கைக்கு, குடும்பங்களுக்கு, சமூகத்துக்கு அழைக்கும் தேவையை நினைவுறுத்துகின்றது. இவ்வெளிப்படையான நிலையை எளிய பெத்லகேம் பிறப்பானது நாம் வேறுபாடுகள் இல்லாமல் மற்றவர்களின் தேவைகளுக்கு மிகுந்த உணர்ச்சியுடன் இருக்க முயற்சிப்பதற்கு ஓர் உலகளாவிய அழைப்பு விடுக்கின்றது. இக்காலமானது மிகவும் மகிழ்ச்சியுடன் கழிக்கும் காலமாகும். எனினும், இது ஓர் வெளிப்புற கொண்டாட்டத்தை மட்டும் உருவாக்குவதாக இருக்கா-வண்ணம் நாம் கவனமாக இருத்தல் வேண்டும். இயேசு கிறிஸ்துவை கடவுள் என்றும் அவரே எம்மை மீட்க வந்த மீட்பர் எனவும் நாம் எமது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## இரத்தினபுரி புனிதர்களான இராயப்பர் – சின்னப்பர் பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம்.







கடந்த 25.11.2018 ஞாயிறன்று இரத்தினபுரி பேராலய இறைமக்களும் - மறைப்பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து நடத்தினர். விழாவை சிறப்பிக்க கலந்துகொண்ட பங்குத்தந்தை அருட்பணி. எனஸ்லி சுரங்க அடிகளார், உதவி பங்குத்தந்தை அருட்பணி. மரிய ஜோய் அடிகளாருடன் இரத்தினபுரி கன்னியர் மடத்தின் அனைத்து அருட்சகோதரிகளையும், பொதுமக்களையும், கலைநிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பெற்றோர்களினதும், மாணவர்களினதும் நிகழ்வுகளையும் படத்தில் காண்கின்றோம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி**

## சர்வமத சமாதானத்தை சுமந்துக்கொண்டு இரத்தினபுரியிலிருந்து கண்டி மாநகருக்குப் பயணம்.



தொடர்ச்சி 15ம் பக்கம்..

## ஒருதாய் மக்கள் நாமென்போம், ஒன்றே எங்கள் குலமென்போம்.





இரத்தினபுரி கரிட்டாஸ் - செத்மனி நிறுவனத்தின் சர்வமத சமாதான ஒன்றியத்துடன் திருகோணமலை கரிட்டாஸ் ஹிஹெட் நிறுவனத்தினரால் சர்வமத சமாதான உறவை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 16, 17, 18ம் திகதிகளில் எம்முடன் எமதில்லங்களில் தங்கியிருந்து தமது சமாதான உறவை கிறிஸ்துவம், இந்து, இஸ்லாம், பௌத்தம் என எல்லா சமய மக்களும் ஒன்றிணைந்து உறவை பகிர்ந்துகொண்டனர். உறுதி செய்துக்கொண்டனர். இறுதி நாளன்று இரத்தினபுரி மில்லகட விஹாரையில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியிலே ஒரு பகுதியையும், நான்கு மத தலைவர்களும் அன்புறவில் - சமாதான உறவில் சங்கமித்துக் கொண்டிருக்கும் அருமையான நிகழ்வினை படத்தில் காண்கின்றோம்.

ஒன்று எங்கள் ஜாதியே! ஒன்று எங்கள் நீதியே!

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி**

## தேவநற்கருணை நிகழ்வு மொணராகலை பங்கு



2018.11.25 அன்று மொணராகலை புனித அந்தோனியார் ஆலயத்தில் தேவ நற்கருணை திருவருட்சாதனம் 26 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு ஆயத்தப்படுத்திய எமது பங்குத்தந்தை, அருட்சகோதரர் என்டனி பெர்னாண்டோ பிள்ளை, அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், மற்றும் மாணவர்கள் ஆகியோரை படத்தில் காணலாம்.

**தகவல் : P. ஏன் டிலெக்டா**



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தெமட்டக்கொடை புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தையின் வழிகாட்டலின் கீழ் எக்கஸ் சுற்றாடலை சுத்தம் செய்வோம், பாதுகாப்போம், அன்பு செய்வோம், படைப்பை இறைவன் எமக்கு கொடுத்தார் என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதானத்தில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.



தெமட்டகொட பங்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் மரியாயின் சேனையினர் கடந்த 08.12.2018 அன்று அமலோற்ப அன்னையின் திருநாளன்று தமது சபையின் திருநாளை கொண்டாடினர். அன்றைய தினம் சபையின் அங்கத்தவர் சபைக்குரிய கழுத்துப்பட்டியை திருப்பலிக்குப்பின் ஆசீர்வதித்து அணித்து கொண்டனர். சபை அங்கத்தவர்களைப் படத்தில் காணலாம்.

**தகவல் : அந்தனி மெரினா**



தேசிய யோசேவ்வாஸ் குழுவின் 144வது கூட்டமானது தலைவரான மேதகு ஆயர் ஜோசப் வியானி பர்னாந்து ஆண்டகை மற்றும் உறுப்பினர்களாக குருவானவர்களின் பங்கெடுப்பில் இடம்பெற்றது. பலகையினால் செதுக்கப்பட்ட ஆக்கமான புனித ஜோசப் வாஸின் திருச்சுரூபத்தை திரு. ரேமன்ட் பர்னாந்து அவர்கள் ஆயருக்கு கையளித்தார். இத்திருச்சுரூபமானது மஹோகாளி பலகையினாலான 28 அங்குல உயரம் கொண்டது. இது அருட்பணி. டோனி மாட்டின் அடிகளாரின் வேண்டுகோளுக்கிணங்க செதுக்கப்பட்ட திருச்சுரூபமாகும்.

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
23 மார்கழி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# இறைவன் மனிதனைப் பற்றி சிந்தித்தன் விளைவாக தன்னுடைய மகனையே மனிதருவில் பிறக்கசெய்தார்.

“இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பாள், அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவீர்” (மத் 1:22,23) இவ்வருடத்தின் இறுதி மாதத்திலே நாம் இருக்கின்றோம். இவ்வருடம் முழுவதும் எம்மை பல வழிகளிலும் வழிநடத்தி பாதுகாத்து, தனது கிருபையால் எம்மை நிரப்பியதற்காக முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்.

இம்மாதத்தில் மிக முக்கியமான விழாவாக கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடும் நாம் இவ்விழா நமக்கு வழங்கும் செய்தி என்ன? இயேசுவின் பிறப்பு சாதாரண மனித பிறப்பு அல்ல, மாறாக இறைவனே மனிதனான பிறப்பு, மனித மூலத்தினால் உண்டான பிறப்பு அல்ல, இறைச்சித்தத்தினால் உண்டான பிறப்பு. மனிதர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பை நிறைவுக்கு கொண்டு வந்த பிறப்பு. உலகிற்கு பல அறிகுறிகளைக் கொண்டு வந்த பிறப்பு. மனித குலத்தில் பல மாற்றங்களை பிறந்திட வித்திட்ட பிறப்பு. சிறுவர் முதல் முதியோர் வரை மகிழ்ச்சியோடு எதிர்பார்த்திருக்கும் பிறப்பு, உண்மையான மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் எதிர்பார்ப்பையும், இத்தனை சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் தான் தரணி முழுவதுமே இப்பிறப்பை சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

கிறிஸ்மஸ் விழா நமக்கு விடுக்கும் செய்தி என்னவென்றால் இறைவன் மனிதனைப் பற்றி சிந்தித்தன் விளைவாக தன்னுடைய மகனையே மனிதருவில் பிறக்கச்-செய்தார். இறைவனே மண்ணில் மனிதனாக பிறந்த நாள். மனிதனும் இறைவனை அடைய வழிசெய்த நாள். இன்று கிறிஸ்து பிறப்பு விழாவின் அர்த்தங்கள் மாறி வியாபாரமாக மாறிவிட்டது. இம்மாதம் முழுவதும் உடைகள் வாங்குவது, அலங்கார பொருட்கள் வாங்குவதும், வெளி ஆடம்பரங்களில் கூடிய கவனம் செலுத்தி, அதிலே லயித்து நிற்கும் மாதம். இவை உண்மையான கிறிஸ்து பிறப்பு விழா அல்ல, கிறிஸ்து பிறப்பு விழா என்பது நம்மிடம் உள்ளதை மற்றவர்களோடு பகிர்வது, ஏழைகளுக்கு உதவுவது, பகைவர்களை மன்னித்து வாழ்தல், மனமாற்றம் அடைதல், சுயநலத்தை விட்டு பிறர் நலத்தோடு வாழ்வது. இவ்வாறு நாம் வாழும் போது தான் இறைமகன் இயேசு நம் உள்ளத்திலும் இல்லத்திலும் பிறப்பார். ஆகவே கிறிஸ்மசின் அர்த்தம் புரிந்து நல்லவைகளையே சிந்தித்து, நல்லவைகளை செய்வோம். இதிலிருந்து பிறக்கும் மகிழ்ச்சி தான் நம்மை உண்மை கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு இட்டுச்செல்லும்.


அடுத்து இம்மாதத்தில் 28ம் திகதி மாசில்லா குழந்தைகள் தினத்தை கொண்டாடுகின்றோம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் குழந்தைகள் இன்றைய நவீன உலக கலாச்சாரங்களில் மூழ்கவிடாது ஒழுக்கம், கட்டுப்பாடு, இறைபக்தி, பகிர்வு, மன்னிப்பு போன்ற நல்ல விழுமியங்களை ஊட்டி வளர்க்க முன்வரவேண்டும். 30ம் திகதி திருக்குடும்பத் திருவிழா. எங்கள் குடும்பங்களும் திருக்குடும்பங்களாக மாற திருக்குடும்பத்தின் பண்புகளை ஏற்று வாழ்வோம் புனித யோசேப்பு, புனித மரியா, இயேசுவின் முன்மாதிரிகையான வாழ்க்கையை நாமும் பின்பற்றுவோம்.

சீரான குடும்பம் வளமான குடும்பம்,
வளமான குடும்பம், மகிழ்ச்சியான குடும்பம்,
மகிழ்ச்சியான குடும்பம், குட்டி விண்ணகம்.

**உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும், பிறக்கபோகும் புத்தாண்டில், வளமையும், செழுமையும், சமாதானமும் பெற்ற வாழ வாழ்த்துகின்றேன்.**

இறையாசீருடன் ஆசிரியர்







இயேசுவின் பிறப்பு ஒரு வரலாற்று நிகழ்வு. உலக வரலாற்றை கி.மு, கி.பி என்று பிரித்து அடையாளப்படுத்த அடிப்படைக் காரணமானவர் இயேசு. இயேசுவின் பிறப்பு புதிய வரலாறு படைத்தது. இந்த உலகில் நாம் ஒவ்வொருவருமே அதிசயமானவர்கள் தான். காரணம் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவனது தாய், தந்தை, அவர்களின் தாய் தந்தை என்று கணக்கீடு செய்துக் கொண்டே போகும்போது ஒரு தலைமுறைக்கு 25 ஆண்டுகள் என்று வைத்துக் கொண்டால் 500 ஆண்டுகள் வரை இன்றுள்ள ஒவ்வொருவரையும், உருவாக்கக் காரணமானவர்கள் 1 இலட்சத்து 48 ஆயிரத்து 576 எனப்புள்ளி விபரம் ஒன்று புலப்படுகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆகவே ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு மிகப்பெரிய பாரம்பரியம் இருக்கிறது.

இயேசுவின் பிறப்பு விழாவுக்கும் மிகப் பெரிய பாரம்பரியமும் வரலாற்று பின்னணியும் இருக்கின்றன. இவரின் மூதாதையர் பட்டியலை மத்தேயு நற்செய்தியாளர் (மத் 1:1-17) எடுத்துக்காட்டுகின்றார். அதேபோல் புனித லூக்காவும் எடுத்துக்காட்டுகின்றார். ஆகவே இயேசுவின் பிறப்பு என்பது ஆதாம், ஏவாள் காலத்திலேயே முன்குறித்து வைக்கப்பட்டு (தொ.நூ 3:14) அது ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு நகர்த்தப்பட்ட ஒரு வரலாற்று உண்மை.

இயேசுவின் பிறப்பு விழா என்பது ஏதோ ஆண்டுதோறும் வந்துவிட்டுப் போகிற வாடிக்கையான வேடிக்கை நிகழ்ச்சி அல்ல, மாறாக இது மானுட விடுதலையை, மனித மாண்பை ஒவ்வொருவரும் இப்படித்தான் வாழவேண்டும் என்பதை சுட்டிக்காட்டும் விழா.

இந்த உலகில் ஒவ்வொரு மனிதரும், பிறப்பெடுக்கும் போதே அவர்களுக்கென்று இலட்சியங்களும், தேடல்களும் உடன்பிறக்கின்றன. அவைகளைக் கண்டு கொண்டு கடைப்பிடித்து வாழ்பவர்களைத் தான் வரலாறு கூறும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இயேசுவின் பிறப்பு, அனைத்து மக்களாலும் நினைவுகூர்ந்து கொண்டாடப்படுகின்றது. அதற்கு காரணம் மீட்பினை அடிப்படையாகக் கொண்ட அவரது இலட்சிய வாழ்வு பெண்ணினத்தின் விடிவெள்ளியாக உதித்த கன்னி மரியாள் கடவுளின் மகன் இயேசுவைக் கருவில் தாங்கிய பொழுது பாடிய புகழ்ச்சிப் பாடலில் (லூக் 1:46-55) கடவுளின் கருணையையும், இரக்கப் பெருக்கத்தையும், அவர் தரும் விடுதலை வாழ்வையும், எடுத்துக்காட்டிப் பாடுகிறார். இயேசுவும் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதும், சிறைப்பட்டோரை விடுவிப்பதும், பார்வையற்றோருக்கு பார்வை கொடுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதுமே தனது இலட்சியம் என்பதை தனது பணிவாழ்வை தொடங்கும் நிலையில் எடுத்துக்காட்டுகின்றார். இலட்சியத்தோடு வாழ்பவர்களால் மட்டுமே வரலாறு படைக்கவும், வரலாறாக மாற்றவும் முடியும்.

இயேசு ஏழைகளுக்காகவே பிறந்தார். ஏழைகளுக்காகவே வாழ்ந்தார். அதனால்தான்...

15

# வரலாறு படைத்த இயேசுவின் பிறப்பு



## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# நான் பெத்லகேம் விடுதி காப்பாளன் பேசுகிறேன்





**இறைமகன் என்று நீங்கள் சொல்லுகின்ற இயேசு, "இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன்" என்று உங்களுக்கு கூறியிருக்கிறாரே, நினைவிருக்கிறதா? உங்களில் எத்தனை பேர் அவருடைய கோரிக்கைக்கு செவிசாய்க்கிறீர்கள்?**

**அவருடைய முகத்திலறைந்தது போல கதவை சாத்துபவர்களும், அவரது கோரிக்கையை நிராகரிப்பவர்களுமே உங்களில் அதிகம் அன்றோ? அவர் மெசியா என்று தெரியாமல் தான் நான் கதவை மூடினேன். ஆனால், அவர் கடவுள், இறைமகன் என்று தெரிந்தும் நீங்கள் கதவைத் திறக்க மறுக்கிறீர்களே?**



வணக்கம்.. நண்பர்களே!

என் பெயர் தாதன். முதன்முறையாக மக்கள் தொகை கணக்கிடும்படி சிரியாவின் ஆளுநராக இருந்த குரேனியு கட்டளையிட்ட காலத்தில், நான் பெத்லகேமில் குடியிருந்தேன். என்னுடைய வாழ்நாளின் அந்தக் கட்டத்தில் தான் அந்த சம்பவம் நடந்தது. பின்வரும் நாள்களில் நேரிலே பார்த்திராதவர்கள் கூட (இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த பிறகும்) என்னை வசைபாடும் அளவுக்கு அவப்பெயர் எனக்குக் கிடைத்தது.

என்னைப் பற்றி நீங்கள் தெரிந்து கொண்டதெல்லாம் உத்தேசமான யூகங்களும், கட்டுக் கதைகளுமே. என்னைக் குறித்து உங்களுக்குத் தெரிந்த விவரங்களை நீங்கள் திருவிவிலியத்தில் படித்து அறிந்துகொண்டதாக நினைக்கிறீர்கள். ஆனால் என்னைப் பற்றி அந்த மறைநூல் எதையுமே சொல்லவில்லை என்பதே உண்மை. "நான் ஒரு ஈவிரக்கமற்ற மனிதன்", "யோசேப்பு மரியா என்ற இளம் தம்பதியர் தங்குவதற்கு இடமளிக்காமல், மனிதாபிமானமற்ற முறையில் சத்திரத்தின் கதவை மூடியவன்" என்று என்னைப் பற்றி நீங்கள் முடிவு செய்திருப்பீர்கள். ஆனால், அன்று இரவு நிகழ்ந்ததைக் குறித்து உங்கள் புனிதநூல் சொல்வதென்ன?. "அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்". இதில் இந்த பாவப்பட்ட விடுதிக் காப்பாளனைப் பற்றி ஏதாவது தவறாக சொல்லப்பட்டுள்ளதா? இல்லைதானே? ஆனாலும், பல நூற்றாண்டுகளாக கிறிஸ்மஸ் விழா தொடர்பான நிகழ்வுகளில் "மகா கருமி"யாகவும், "மோசமான கஞ்சப்பிசினாறி"யாகவும் நான் சித்தரிக்கப்படுகிறேன்.

நிஜத்தை சொல்வதென்றால், அந்நாள்களில் நான் பெத்லகேம் ஊரில் ஒரு விடுதி காப்பாளனாக இருந்தேன். இக்காலத்தில் நீங்கள் "ஹோட்டல்" "மோட்டல்" "லாட்ஜ்" என்றெல்லாம் சொல்லுகிறீர்களே, அவற்றைப் போல வசதியான விடுதி அல்ல அது. தனித் தனி அறைகள், இணைக்கப்பட்ட குளியலறை, எந்நேரமும் வெந்நீர், கட்டில், மெத்தை, நீச்சல் குளம் - இவை போன்ற வசதிகள் எதுவும் என் சிறிய சத்திரத்தில் இல்லை. ஊருக்கு வெளியே சாலையோரத்தில் இருந்ததால், பயணம் செய்வோரும், அவர்களுடைய பரிவாரங்களும், குதிரை, ஒட்டகம் ஆகிய கால்நடைகளும் இரவு நேரத்தில் தங்கி இளைப்பாற அனுகூலமாக இருந்தது. பெரிய அளவிலான வருமானம் ஏதும் இல்லையென்றாலும், அந்த விடுதியினால் என் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

"மக்கள் தொகை கணக்கிடப்பட வேண்டும்" என்று சிரியாவின் ஆளுநர் குரேனியு ஆணையிட்டதையடுத்து, அந்த சிற்றூரில் எல்லாமே மாறிப் போயின. தத்தம் பெயரை பதிவு செய்வதற்காக மக்களெல்லாரும் அவரவர் சொந்த ஊருக்கு போக வேண்டியதாயிற்று. பேரரசர் தாவீதின் சொந்த ஊராகிய பெத்லகேம் மிகவும் பழைமையான ஊர். பல்லாண்டுகளுக்கு முன்பாக அங்கிருந்து யூதேயா நாட்டின் பல இடங்களுக்கும் குடிபெயர்ந்து சென்றிருந்த குடும்பத்தார் எல்லாரும் அங்கே வந்து குவிந்தனர். ஒரு சிற்றூரில் திடீரென ஏராளமான ஜனங்கள் ஒன்றுகூடியதால், எங்குநோக்கினும் ஒரே கூச்சலும், குழப்பமும் நிலவியது.

எல்லா இடத்திலும் மனிதத் தலைகள். அளவுக்கு அதிகமான இவ்வளவு ஜனங்களை பெத்லகேமில் முன்னெப்போதும் நாங்கள் கண்டதில்லை. வருடத்திற்கொரு முறை நடைபெறும் "ஹனூக்கா" (Hanukkah) பண்டிகை பேரணியின் போது கூட பார்த்ததில்லை. இதன் விளைவாக என்னுடைய சத்திரத்தைச் சுற்றிலும் ஏகப்பட்ட ரகளை. எந்தவொரு இரவை "புனிதமான இரவு" என்று நீங்கள் கொண்டாடுகிறீர்களோ, அந்த இரவில் என்னுடைய சத்திரம் நிரம்பி வழிந்தது. நடக்கக் கூட இடமில்லாத வகையில் ஜனக்கூட்டம் நிறைந்திருந்தது. அந்த இரவில் இடம் கேட்டு வந்த பலரை நான் திருப்பி அனுப்பியதை போலவே, யோசேப்பு மரியா என்னும் அந்த இளம் தம்பதியரையும் திருப்பி அனுப்பினேன்.

"மரியாவைப் போன்ற ஒரு நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணை திருப்பி அனுப்ப உனக்கு எப்படி மனம் வந்தது?" என்று தானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன்... முதலில், அந்த இளம்பெண் கர்ப்பிணி மட்டுமல்ல, என்னுடைய சத்திரத்திற்கு வந்தபோது அநேகமாக அவள் பேறுகால வேதனையில் இருந்தாள். "ஜனங்கள் ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக் கொண்டு நடமாடுகின்ற ஒரு பழுதடைந்த சத்திரம், ஒரு இளம் பெண்ணின் பிரசவத்திற்கு எந்த வகையிலும் ஏற்ற இடமல்ல" என்பதை ஒத்துக்கொள்வீர்கள், அல்லவா? மேலும், அன்றைக்கு அந்த விடுதியில் தங்கியிருந்தவர்கள் தங்கள் இரவுநேர உறக்கமும், ஓய்வும் அமைதியாகக் கழிந்திடும் என்ற நம்பிக்கையில் நிறையவே கட்டணம் செலுத்தியிருந்தார்கள். ஒரு பெண்ணின் பிரசவ ஓலமும், பிறந்த குழந்தையின் அழுகையும் அந்த நம்பிக்கையை குலைத்திட அனுமதிக்க முடியுமா?

இப்போது சிலர் கேட்கிறார்கள்: "உலகின் மீட்பரான மெசியாவுக்கு இடமில்லை என்றுச் சொல்லி திருப்பி அனுப்பலாமா?" என்று. "அந்த இரவில் பிறக்கப் போகிற குழந்தை தான் பிற்காலத்தில் இயேசு என்ற பெயரில் பிரபலமான "ரபி"யாகப் போகிறார்" என்று அப்போது எனக்குத் தெரியாதே! மேலும், நான் நல்ல முறையில் யூதமதத்தின் நெறிகளை பின்பற்றிவந்தேன். திருநூல் சுவடிகளையும் தவறாமல் வாசித்து வந்தேன். "ஆட்சிப்பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும் அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்".. இப்படித்தான் மெசியாவைக் குறித்து எங்கள் இறைவாக்கினர் எசாயா சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, ஒரு ஏழைப் பெண்ணிடம் பிறக்கப் போகின்ற பச்சிளம் பாலகன் தான் இத்தகைய மேன்மையான இறைவாக்கு முன்னறிவிப்பை நிறைவேற்றுவார் என்று நான் எவ்வாறு எதிர்பார்க்கக் கூடும்? அரசகுமாரனாக மெசியா வருவார் என்று தான் எல்லோரும் காத்திருந்தோமே அன்றி, ஒரு ஏழைப் பெற்றோருக்கு மகனாகப் பிறப்பார் என்று நாங்கள் கற்பனைக் கூட செய்து பார்க்கவில்லை.

"இக்கட்டான நேரத்தில் உதவி கேட்டு வருவோருக்கு கைகொடுத்திருக்க வேண்டும்" என்று சிலர் கூறுவது எனக்குக் கேட்கிறது. நான் ஒன்று கேட்கிறேன்: "நீங்கள் ஒருவரையொருவர் எவ்வாறு நடத்துகிறீர்கள்? உங்களிடம் அன்பாயிருப்பவர்களுக்குத் தான் நீங்கள் அன்பு காட்டுகிறீர்கள். உங்களுக்குத் பரிசு தருபவர்களுக்குத் தான் நீங்கள் பரிசு தருகிறீர்கள். உங்களுக்கு உதவி செய்பவர்களுக்குத் தான் நீங்கள் உதவி செய்கிறீர்கள். ஆக, எல்லாமே ஒரு வகையான "கொடுக்கல் வாங்கல்" போன்றது தானே? நான் மட்டும் எப்படி வித்தியாசமாக இருக்க முடியும்? நெருக்கடியான நேரத்திற்கு தகுந்தாற் போல அதிக கட்டணம் தந்தவர்களுக்கு என் சத்திரத்தின் கதவுகளை திறந்தது எப்படி தவறாகும்?"

"கடவுளை வரவேற்காமல் கதவை சாத்தி-விட்டேன்" என்று கூட சிலர் நினைக்கலாம். ஆனால், ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் விழாக்காலங்களில் "ஷாப்பிங்" என்ற பெயரில் கடைவீதிகளிலும், வணிக மையங்களிலும் நீங்கள் மூச்சிரைக்க ஏறி இறங்குவதை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இத்தகைய விழாக்கால "ஷாப்பிங்" எல்லாம் கடவுளுக்காக செய்யப்படுபவைதானா? இறைமகன் என்று நீங்கள் சொல்லுகின்ற இயேசு, "இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன்" என்று உங்களுக்கு கூறியிருக்கிறாரே, நினைவிருக்கிறதா? உங்களில் எத்தனை பேர் அவருடைய கோரிக்கைக்கு செவிசாய்க்கிறீர்கள்? அவருடைய முகத்திலறைந்தது போல கதவை சாத்துபவர்களும், அவரது கோரிக்கையை நிராகரிப்பவர்களுமே உங்களில் அதிகம் அன்றோ? அவர் மெசியா என்று தெரியாமல் தான் நான் கதவை மூடினேன். ஆனால், அவர் கடவுள், இறைமகன் என்று தெரிந்தும் நீங்கள் கதவைத் திறக்க மறுக்கிறீர்களே?

மன்னிக்க வேண்டும், நண்பர்களே... உங்கள் மேல் குற்றம் சுமத்துவதோ அல்லது உங்களுக்கு போதனை செய்வதோ என் நோக்கமல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பெத்லகேம் புறவெளியை ஒரு வால் நட்சத்திரம், ஒளிமயமாக்கிய அந்த இரவில், நான் என் மனதார எந்தத் தவறும் செய்யவில்லை என்பதை உங்களிடம் சொல்லிவிட்டு போகவே வந்தேன். விடைபெறுவதற்கு முன், உங்களிடம் ஒரு சமாச்சாரம் சொல்லிவிடுகிறேன். உங்களைத் தேடி அவர் வரும்போது, நீங்கள் எப்படி செயல்பட போகிறீர்கள்? காலம் கடந்து நான் வருந்துவது போல, நீங்களும் வருத்தப்படக் கூடாதல்லவா? எனவே, அவர் வந்து கதவைத் தட்டும்போது, கவனத்தை சிதறவிடாமல், அவருக்கு உங்கள் இதயக் கதவுகளைத் திறந்து விடுங்கள். பின்னாளில் நீங்கள் வருத்தப்பட அவசியமிருக்காது.

இத்தனை நேரம் நான் சொன்னதை கவனித்துக் கேட்டதற்கு நன்றி, நண்பர்களே, வருகிறேன்.

## குடில்

புனித பிரான்சிஸ் அசிசியார் 1223 ஆம் ஆண்டு கிரெச்சியோவிலுள்ள குகையில் முதன் முதலாக வடிவமைத்தார். அவர் இதை விவிலியத்திலுள்ள மனிதர்கள் மற்றும், விலங்குகளின் கதாபாத்திரத்தினால் உருவாக்கினார். அவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் கிறிஸ்மஸ் நிகழ்வை எளிதாகப் புரிந்து கொள்ள இவ்வாறு செய்தார். திருத்தந்தை மூன்றாம் கொனோரியஸ் இத்தகைய நிகழ்வுக்கு தமது ஆசீர்வாதத்தை வழங்கினார். அதன் பின் இது உலகம் முழுவதும், பிரபலமடைந்து சிறிது சிறிதாக பொம்மைகள், உருவங்கள் விலங்குகளுக்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டது,

எருதும், கழுதைகளும், குடில்களில் பல வேளைகளில் உபயோப்படுத்தப்படுகின்றன. ஆனால் எதற்காக அவை உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதன் பொருள் பலராலும் புரிந்து கொள்ளப்படவில்லை. யாவேக்கு எதிராக மக்கள் பாவம் செய்த போது இறைவாக்கினர், ஏனைய "இம்மக்கள் எருதுகளையும், கழுதைகளையும் விட மோசமானவர்கள்" என்று அவர்களை குறித்துசாடுகிறார். இயேசு மாட்டுத் தொழுவத்தில் விலங்குகளின் மத்தியில் பிறந்தபோது யூதுர்கள் அவரை அறிந்துகொள்ளவில்லை. மனிதர்-களைப்போல் விலங்குகளும், மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இயேசு தொழுவத்தில் பிறந்தார். இதை நினைவுகூறும் வண்ணமாகவே நாம் குடிலிகளில் கழுதை, எருது போன்ற விலங்குகளை வைக்கிறோம்"







# இயேசுவின் வருகையின்போது

## 7 விதமான உணர்வலைகள்!

**இயேசு பிறப்பைப் பற்றிய நற்செய்தியைப் பெற்றவர்களிடம் கீழ்வரும் 7 விதமான உணர்வலைகள் அசைவாடியதை நாம் காண முடிகிறது.**

1. நிகழ்ச்சி
2. காட்சி
3. மகிழ்ச்சி
4. மாட்சி
5. எழுச்சி
6. புகழ்ச்சி
7. சாட்சி.

**1. நிகழ்ச்சி**

இயேசுவின் பிறப்பைப் பற்றி விரிவாக விவரிக்கும் புனித மத்தேயு அவரது மூதாதையர்களின் விரிவான பட்டியலை நமக்குத் தந்து, இயேசுவின் பிறப்பு ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்று நிரூபித்துக் காட்டுகின்றார். இப்பட்டியலைக் கொடுத்தபின் இயேசுவின் பிறப்பு எவ்வாறு நடந்தேறியது என்று விவரிக்கும் முன் புனித மத்தேயு இவ்வாறு கூறுகின்றார். “இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள்” (மத் 1:16)

புனித யோவான் இயேசுவின் பிறப்பை நாம் கண்கூடாகக் கண்டு மகிழும் ஒரு மாபெரும் அரிய நிகழ்ச்சியாக இருப்பதைக் கீழ்க்காணும் வரிகளில் நமக்குக் கொடுக்கின்றார்.

“வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார்” (யோவா 1:14)

“கடவுளை யாரும் என்றும் கண்டதில்லை

தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனை அவர் வெளிப்படுத்தியுள்ளார்” (யோவா 1:18)

**2. காட்சி**

இயேசுவின் பிறப்பைக் கீழ்வரும் நபர்கள் மாபெரும் காட்சியாகக் காண்கின்றனர். அன்னை மரியாள் இறைமகன் தனது மடியில் தவழ்வதைக் காண்கின்றாள். யோசேப்பு, கனவின் வழி வந்த நற்செய்தியைக் கண்கூடாகக் காணக்கூடிய கனியாகக் காட்சியாகக் காண்கின்றார். கீழத் திசையிருந்து வந்த அரசர்களும் எளிய ஏழையாய் இருக்கும் இடையர்களும் இயேசுவின் பிறப்பு என்று காட்சியைக் கண்டு தெண்டனிட்டு ஆராதிக்கின்றார்கள். பல்லாண்டுகளாக மெசியாவின் வருகைக்காக ஏங்கிக்காத்திருந்த, “இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்த ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் சாகப் போவதில்லை” என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்த சிமியோன் ஒரு காட்சியாகக் காண்கின்றார். இறைமகனைத் தன் கையிலும் ஏந்துகின்றார். எண்பத்து நான்கு வயதான அன்னா என்ற மூதாட்டி அல்லும் பகலும் கோவிலை விட்டு நீங்காமல் பணிசெய்து வந்த அவள் இயேசுவைக் காட்சியாகக் கண்டு மகிழ்கிறாள்.

**3. மகிழ்ச்சி**

அன்னை மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தபொழுது, எலிசபெத்தின் கருவறையிலிருந்த குழந்தை “மகிழ்ச்சியால்” துள்ளிற்று (லூக் 1:41) ஏனென்றால் அன்னை மரியாளின் கருவறையில் மீட்பர் இயேசு குழந்தையாக இருந்ததால், இயேசுவின் முன்னோடியாகச் செயல்பட இறைவனால் முன்குறித்து வைக்கப்பட்ட திருமுழுக்கு யோவான் என்ற குழந்தை மகிழ்ச்சியடைகின்றது.

அன்னை மரியாளும் இயேசுவின் வருகையை நினைத்துப் போற்றிப் புகழ்ந்து, “என் மீட்பராம் கடவுளை நினைத்து என் மனம் பேருவகை கொள்கின்றது” (லூக் 1:47) என்ற பேருவகை கொண்டு மகிழ்ச்சியில் திளைக்கின்றாள்.

வானதூதரணி இடையர்களுக்குத் தோன்றி “அஞ்சாதீர்கள்! இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்” (லூக் 2:10) என்று கூறி அவர்களும் மகிழ்ச்சியில் மூழ்கின்றனர்.

**4. மாட்சி**

லூக்கா எழுதியுள்ள நற்செய்தியின்படி “ஆண்டவருடைய தூதர் அவர்கள் முன் (இடையர்கள்) வந்து நின்றபோது ஆண்டவரின் “மாட்சி” அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது” (லூக் 2:9) என்பதைக் காண்கின்றோம். புனித யோவானும் தான் எழுதிய நற்செய்தியில் இத்தகைய மாட்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

“வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம். அருளும், உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்” (யோவா 1:14)

**5. எழுச்சி**

இயேசு திருக்கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டபொழுது சிமியோன் குழந்தையைக் கையிலேந்தி ஆசி கூறி “இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்” (லூக் 2:34) என்றார். இதே கருத்தை அன்னை மரியாளின் புகழ் ஆராதனைப் பாடலில் நாம் காண்கின்றோம்.

“வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்து உள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்” (லூக் 1:53)

**6. புகழ்ச்சி**

இயேசுவைக் கருத்தாங்கிய அன்னை மரியாள், “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றனது. என் மீட்பராம் கடவுளை நினைத்து என் மனம் பேருவகை கொள்கின்றது” என்ற புகழ்ச்சிப் பாடலைப் பாடுகின்றார்” (லூக் 1:47)

இடையர்கள் குழந்தை இயேசுவைக் கண்டபின், “தாங்கள் கேட்டவை கண்டவை அனைத்தையும் குறித்துக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டே திரும்பிச் சென்றார்கள்” (லூக் 2:20)

எண்பத்து நான்கு வயதான அன்னாவும் குழந்தை இயேசுவைக் கண்டபின் “கடவுளைப் புகழ்ந்து” நன்றி கூறுகின்றாள் (லூக் 2:38)

**7. சாட்சி**

இடையர்கள் குழந்தை இயேசுவைக் கண்டபின் “அந்தக் குழந்தையைப் பற்றித் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட யாவரும் இடையர்கள் தங்களுக்குச் சொன்னவற்றைக் குறித்து வியப்படைந்தனர்” (லூக் 2:17-18).

குழந்தை இயேசுவை அவரது பெற்றோர் திருக்கோவிலில் இறைவனுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தபொழுது அன்னா என்ற மூதாட்டி குழந்தையைக் கண்டு மகிழ்ந்து “எருசலேமின் மீட்புக்காக காத்திருந்த எல்லோரிடமும் அக்குழந்தையைப் பற்றிப் பேசினார்” (லூக் 2:38). இவ்வாறு அன்னா இயேசுவுக்குச் சாட்சியாகத் திகழ்ந்தார்.

நாமும் மேற்கூறப்பட்டவர்களின் மனநிலையைக் கொண்டிருப்போம். இயேசு பிறந்த நிகழ்ச்சியைப் பற்றி போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்து அவரது மாட்சிக்குச் சாட்சிகளாய் விளங்குவோம்.





# அன்பிற்கோர் அவதாரம் அண்ணல் இயேசு



23 மார்கழி, 2018 06

திரு. அம்புறோஸ் பீற்றர்

இறைவாக்கினரால் முன் அறிவிக்கப்பட்ட இறைமகன் இயேசு கவனிப்பார் அற்ற நிலையில் மனித வரலாற்றுக்குள் நுழைந்த நாளை வருடந்தோறும் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம். ஆனால் நாம் கொண்டாடும் கிறிஸ்துபிறப்பு விழாவின் அர்த்தத்தை புரிந்துகொண்டுள்ளோமா? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கடவுள் தம் மக்களைப் பாவம் என்னும் இருளில் இருந்தும் அடிமை வாழ்விலிருந்தும் விடுவிக்க தொடக்ககாலம் முதல் பல இறைவாக்கினர்கள் வழியாக முயற்சித்தார். ஆனால் நாம் வாழ்கின்ற இந்தக் காலத்தில் தன் ஒரே மகன் வழியாக அந்த மீட்பு என்னும் பேரொளியை அளிக்கின்றார். ஆனால் நாமோ அவரது அன்பை உதறித் தள்ளிவிட்டு உறங்கிக்கொண்டிருக்கின்றோம். எளிய முறையில் குழந்தை வடிவில் பிறந்த கடவுள் இறந்தோரின் கடவுள் அன்று மாறாக வாழ்கின்ற கடவுள் அவரிடம் இருக்கின்ற வாழ்வுதான் இன்று மனிதர்களாகிய நம் அனைவருக்கும் ஒளியாக சின்னஞ்சிறு குடிலில் பிறந்துள்ளது. கடவுள் மனிதராகப் பிறந்து மானிட குலத்திற்கே மாபெரும் கொடையாக அமைந்துள்ளது. பலமுறை பல வகைகளில் இந்த மீட்பு என்னும் ஒளியை வாழ்வு என்னும் ஒளியை அளிக்க முயன்ற கடவுள் தன் ஒரே மகனை உலகிற்கு அளிக்கின்றார்.

இவ்வாறு கடவுள் தன் மகனை உலகிற்கு அனுப்ப ஏதுவாயிருந்த காரணம் என்ன? மனிதனை இவ்வுலகில் படைத்த கடவுள் தொடக்கத்திலிருந்தே மனிதன் வாழவேண்டிய வழிமுறையை மோயீசன் வழியாக வெளிப்படுத்தினார். அவர் கொடுத்த கட்டளைகளின் சாராம்சம் அன்பு ஒன்றுதான். மனிதர் அன்பை உணராத நிலையில் பாவம் உலகத்தில் தோன்றலாயிற்று. இந்நிலையில் கடவுள் உலகின்மேல் மீண்டும் அன்பு கொண்டார் அதன் வெளிப்பாடுதான் மனித வடிவில் உதித்த இயேசு. அன்பு என்னும் இறைவனின் நற்செய்தியை வாழ்ந்து காட்டுவதே தனது பணி அதற்காகவே நான் இவ்வுலகிற்கு வந்தேன் என்று கூறிய இயேசு அவ்வாறே வாழ்ந்ததை நாம் நற்செய்தி ஏடுகளில் காண்கின்றோம்.

அன்புக்காக வாழ்ந்த இயேசு அந்த அன்புதான் உண்மை என்பதையும் நிலைநாட்டுகின்றார். இயேசு மரணதண்டனைக் கைதியாக பிலாத்துவின் முன்னிலையில் நின்றபோது இயேசுவுக்கும் பிலாத்துவிற்கும் இடையில் நடந்த உரையாடலின்போது இயேசு இவ்வாறு கூறுவதை நாம் யோவான் நற்செய்தியில் காண்கின்றோம். "உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, இதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே உலகிற்கு வந்தேன்" என்கிறார் இயேசு. அதற்குப் பிலாத்து "உண்மையா அது என்ன? என்கின்றான். ஆம் உண்மைதான் அந்த அன்பு. அன்புக்கு மறுபெயர் அன்பு என்பதை நாம் உணர்ந்துகொண்டால் தான் உலகம் உய்வடையும். இன்றைய உலகில் நாம் காணும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மூலகாரணம் இந்த அன்பு என்னும் உண்மையை உணர்ந்துகொள்ளாமல் இருப்பதுதான். அன்பிற்கோர் அவதாரமாய் அன்பின் முழுவடிவமாய் பிறந்த அண்ணல் இயேசுவின் பிறப்பு விழாவை கொண்டாடும் நாம் "உன்னை நீ நேசிப்பது போல் உனக்கு அடுத்திருப்பவரையும் நேசிப்பாயாக!" என்ற இயேசுவின் பொன்மொழியை பெற்று அவர் தந்த உண்மையில் - அன்பில் நிலைத்து வாழ்வோமாக.



# வெளிச்சம்

கட்டிலில் புரண்டு புரண்டு நித்திரையின்றி தவித்தான் சாமுவேலின் மனைவியும் அவன் செல்ல மகளும் இந்நேரம் நத்தார் திருப்பலிக்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருப்பார்கள். பதினொன்றே காலிற்கு பூசை என்று சொன்னார்கள். கணவன் இந்த நல்ல நாளில்கூட தன் அருகில் இல்லையே என்று அமலிக்கு சரியான வருத்தமாக இருக்கும். ஆனால் மகள் அனு, அப்பா அருகில் இல்லையென்று சிறிது கவலைப்பட்டாலும், புத்தாடை, புதுமையான நத்தார் சோடனை, தின்பண்டங்கள் என்று அதில் அந்த குழந்தை மனம் லயித்திருக்கும். குடும்பத்தோடு நத்தார் கொண்டாட்டம் கொண்டாடி மூன்று வருடம் ஆகிவிட்டது. மீண்டும் எப்போது பாலன் பிறப்பை என் குடும்பத்தோடு சேர்ந்து கொண்டாடப் போகிறேன். குடும்பத்தோடு இணைந்து எப்போ காணிக்கை கொடுப்பேன். சுவாமியிடம் குடும்பமாக முழங்காலில் இருந்து ஆசீர்வாதம் வேண்டுவோமே! இம்முறையும் அமலி தான் இல்லாது ஆசீர்வாதம் வேண்ட செல்லமாட்டாள். 'சீ' இந்த நாட்டுச் சூழ்நிலையாலும், எம் அன்றாட தேவைகளை நிறைவேற்றவும் கடல் கடந்து இந்த அவுஸ்ரேலியாவிற்கு வந்து எத்தனை பாடுகள்! எத்தனை வேலைப்பழு, கஸ்ரப்படுகின்றோம் காசு வருகுது, நிறைய நிறைய; ஆனால் எங்கட சந்தோசங்களை இலங்கையில் அடைவு வச்சிட்டு வந்தோமோ? அல்லது இந்த குயின்சிலாந்தில் தொலைந்து விட்டோமோ?

சாமுவேல் உள்ளம் கலக்கம் அடைந்தது. மனதில் ஏற்பட்ட பாரத்தால் தேம்பி தேம்பி குழந்தை போல் அழுதான். ஆனால் மௌனமாக, காரணம் அவனைப் போன்று கடல் கடந்து அவுஸ்ரேலியாவிற்கு வந்த பலபேர் அடுத்தடுத்த சிறு அறைகளில் உறங்கி கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் ஒன்றை மட்டும் அவ்வேளை உணரவில்லை. மறு அறைகளிலும் மௌனமாக பல விசும்பல்கள் தலையணையோடு பேசுகின்றன என்று;

யன்னலிற்கு வெளியே சிறிது வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது. விடிந்து கொண்டிருக்கின்றது. இப்போ சிறிலங்காவில் இருக்கும் என் குடும்பம் நத்தார் பூசை முடிஞ்சு வீட்டிற்கு திரும்பியிருப்பார்கள். பிறந்திருக்கும் பாலகா, எம் வாழ்விற்கு எப்போ ஒளி கிடைக்கும்? எப்போது இங்கத்த பிரஜா உரிமை எமக்கு கிடைத்து எம் குடும்பத்தை நாம் இங்கு எடுப்பது. அல்லது நாம் அங்கு போவது? எமது தனிமை... எப்போ முடிவடையும்? வேதனை மிகுந்த கேள்விகளை எழுப்பிக் கொண்டே கைத்தொலைபேசியை எடுக்க தலையணை அருகில் கைகளை வைத்தான். காணவில்லை. தடவினான் 'படார்' என ஒரு சத்தம். முழுமையாக இருள் விலகாததால் மின் குமிழை ஒளிரவிட்டான். கட்டிலிற்கு அருகில் கீழே நிலத்தில் 'வேதாகமம்' விழுந்து கிடந்தது. எட பைபிள் தான் விழுந்திடிச்சு, அதோட சேர்ந்து தொலைபேசியும், குனிந்தான்; இரண்டையும் எடுக்க; விரித்தபடி இருந்த பைபிளில் தெரிந்தது. அவன் கண்ணில் அந்த வார்த்தை **"கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை"** சாமுவேலின் உள்ளம் அக்களிப்பால் துள்ளியது. அன்போடும் பக்தியோடும் அள்ளி எடுத்தான் வேதாகமத்தை; அந்த வசனம் எச்சம்பவத்தோடு தொடர்புடையது. கண்களை படரவிட்டான் வேதாகமத்தை நோக்கி. லூக்காஸ் 1ம் அதிகாரம் "இயேசு பிறப்பின் முன்னறிப்பு. ஆறாம் மாதத்தில் கபிரியேல்...




திருமதி. தவநேசன் மேரி றொபினா
தீர்த்தக்கரை, முல்லைத்தீவு.



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு



## திருவருகைக் காலத்தின் 4வது ஞாயிறு (23.12.2018)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** திருவருகைக்காலத்தின் நான்காவது ஞாயிறு தினத்தின் திருவழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் அன்பின் இறைநெஞ்சங்களே! பெண்மையின் மேன்மைக்கு மெருகூட்டும் தாய்மைப் பேற்றை பெற்றவர்களான தூய எலிசபெத் மற்றும் தூய கன்னிமரியாள் ஆகிய இருவரின் சந்திப்பு அவர்களின் உணர்வு பரிமாறுதல்கள், கலந்துரையாடல், மகிழ்ச்சி, அக்களிப்பு போன்றவற்றை இன்றை நற்செய்தி துல்லியமாக விளக்குவதை காண்கின்றோம். இறைவனின் திருவுளம் எது என்பதை தேர்ந்து தெரிந்து இருவரும் அதை நிறைவேற்றுகின்றனர். சிறப்பாக இவர்களிடம் விளங்கிய தாழ்ச்சி என்னும் புண்ணியத்தை நாமும் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் இன்றைய உலகில் நாம் சுயநலத்தாலும், பேராசையினாலும், பழிவாங்கும் எண்ணத்தினாலும் மனித நேயத்தைப் புறக்கணிக்கின்றோம். இந்நிலை மாறவேண்டுமானால் நாம் மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பவர்களாகவும், உறவினை வளர்ப்பவர்களாகவும் மாறவேண்டும். இதற்கு வேண்டிய வரங்களை கேட்டிடப் பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : மீக்கா 5:2-5**
இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்.

**பதிலுரைப் பாடல் :**
கடவுளே எம்மை மீட்குமாறு உமது முகஒளியைக் காட்டியருளும்.

**இரண்டாம் வாசகம் : எபி 10:5-10**
உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன்..

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 1:39-45**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

இறையுணர்விலும் மனித உறவிலும் நாம் வாழ எம்மை வழிநடத்தும் திருஅவையினரான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள் அனைவரும் தமது வார்த்தையாலும் வாழ்வாலும் மக்களுக்கு தேவையான நீதிகளையும், நெறிமுறைகளையும் கற்பிக்கத் தேவையான வரங்களைப் பொழிந்திட அவர்கள் மத்தியில் எழுந்தருளி வாரும்...

நாமும் அன்னை மரியாளைப் போன்று இறைவனின் திருவுளம் எது என்பதை தேர்ந்து தெளிந்து அதன்படி வாழ்ந்து நிறைவேற்றவும், எலிசபெத், மரியாள் இவர்களைப் போன்று உணர்வுகளை மதிக்கவும், உறவுகளை வளர்க்கவும் வேண்டிய அருள்வரங்களைத் தந்திட எம் மத்தியில் எழுந்தருளி வாரும்...

உணர்வுகளை மதிக்கவும், உறவுகளை வளர்க்கவும் நாம் துணிந்தால் எம்மிடையே நிலவும் பகைமையும் வெறுப்பும், தீமைகளும் மறைந்துவிடும் என்பதை நாம் உணரவும், எம்மிடம் உள்ளதை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ளவும், ஆடம்பரங்களை அகற்றி எளிமையை கடைப்பிடிக்கவும் வேண்டிய நல்மனதை தந்திட எம்மிடையே எழுந்தருளி வாரும்...

## கிறிஸ்து பிறப்புப் பெருவிழா (25.12.2018)

**வாசக விளக்கம்:** திருஅவையின் இறைமக்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்கள். வார்த்தை மனுவானார் நம்மிடையே குடிகொண்டார் என்ற இறைவார்த்தை நிறைவேறிய நன்னாள் இதுவாகும். கடவுள் மீட்பின் ஒளியை குழந்தை வடிவில் தந்த நாளும் இதுதான். நீங்கள் என்னை விட்டு விலகிச் சென்றாலும் நான் உங்களைத் தேடிவந்துவிடுவிப்பேன் என்ற கடவுள், கிறிஸ்து என்னும் தன் மகன் வழியாக மீட்பு உண்டு என்று கூறுகின்றார். எளிய முறையில் குழந்தை வடிவில் பிறந்த கடவுள் இறந்தோரின் கடவுளன்று மாறாக வாழ்கின்ற கடவுள். அவரிடம் இருக்கின்ற வாழ்வுதான் இன்று மனிதர்களாகிய நம் அனைவருக்கும் ஒளியாக இந்த ஏழைக் குடிலில் பிறந்துள்ளார். கடவுள் மனிதனாகப் பிறந்தது மானிட குலத்திற்கே மாபெரும் கொடையாக அமைந்துள்ளது. இது கடவுள் உலகின் மீதுகொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துகின்றது. இதனைக் கொண்டாடும் நாமும் எம் இதயக் குடிலில் இயேசு பாலனை ஏந்தி ஒளியின் மக்களாக வாழ வரம் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எசா 52:7-10**
மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும்.

**பதிலுரைப் பாடல் :**
உலகமெங்குமுள அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

**இரண்டாம் வாசகம் : எபி 1:1-6**
கடவுள் தம் மகன் இயேசுவின் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா புலர்ந்தது நமக்குப் புனித நாள் பிறஇனத்தாரே, வருவீர், இறைவன் மலரடி தொழுவீர் ஏனெனில் உலகின்மீது எழுந்தது பேரொளி இன்றே அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 1:1-18**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அடிமைத்தனத்திலும் பாவ வாழ்விலும் வாழ்ந்த மக்களுக்கு விடுதலை வாழ்வை அளிக்க வந்த பாலன் இயேசுவே! பாரெங்கும் பரந்து வாழும் தூய திருஅவைக்கும், திருத்தந்தை, ஆயர்கள், திருப்பணியாளர்கள், துறவியர் அனைவரும் உலக மாந்தர் அனைவருக்கும் உமது மீட்பின் செய்தியை பறைசாற்றி வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

மக்களை பாவம் என்னும் இருளில் இருந்து விடுவிக்க வந்த பாலன் இயேசுவே! மனித மாண்பிற்கு விரோதமான பாவங்களால் நிறைந்துள்ள எமது நாட்டையும் உலகினையும் உமது அன்பு என்னும் பேரொளியால் நிரப்பி அனைவரும் மனிதநேயத்தால் நிரம்பி வாழ வரமருள வேண்டுமென்று...

உம்மை விட்டு விலகிச் சென்ற எங்களைத் தேடி வந்து மீட்ட பாலன் இயேசுவே! நீர் இவ்வுலகிற்கு கொண்டு வந்த அன்பு, அமைதி, மகிழ்ச்சி யாவும் எம் உள்ளங்களில் நிலைத்திட நாம் ஏழைகளையும் ஒடுக்கப்பட்டோரையும், வாழ்வு இழந்தவர்களையும் ஆதரித்து பகிர்வு வாழ்வில் நிலைத்திட வரமருள வேண்டுமென்று...

## திருக்குடும்பத் திருவிழா (30.12.2018)

**வாசக விளக்கம்:** அன்புள்ளம் கொண்ட திருஅவையின் திருக்கூட்டமே! இன்று நாம் திருக்குடும்ப திருவிழாவை கொண்டாடுகின்றோம். இந்த நவீன உலகில் காலச்சூழ்நிலைகளால் பல குடும்பங்கள் தெருக்குடும்பங்களாக வாழும் நிலையில் திருக்குடும்பங்களாக வாழ நாம் அழைக்கப்படுகின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் பிள்ளைகள் பெற்றோரிடம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பார்க்கின்றோம். இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் அடியார் நாம் ஒவ்வொருவரும் பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்ச்சி, கனிவு, பொறுமை என்னும் பண்புகளால் நிறைந்து ஒருவரை ஒருவர் மன்னிப்பதுடன் அனைத்திற்கும் மேலாக அன்பைக் கொண்டிருக்கவேண்டும் என அறிவுறுத்துகிறார். குடும்பவாழ்வு பற்றி எம் மனங்களில் எழும் கேள்விகள் பலவற்றிக்கும் சூசை, மரி, இயேசு வாழ்ந்த திருக்குடும்ப வாழ்வுக்கு விளக்கம் தருவதாக இன்றைய மூன்று வாசகங்களும் அமைந்துள்ளன. திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையை பின்பற்றி வாழ இறையருள் வேண்டுவோமாக

**முதல் வாசகம் : 1 சாமு 1:20-22, 24-28**
அவன் தன் வாழ்நாள் அனைத்தும் ஆண்டவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டவன்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே உமது இல்லத்தில் தங்கியிருப்போர் பேறுபெற்றோர்

**இரண்டாம் வாசகம் : 1 யோவா 3:1-2,21-24**
நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகின்றோம், கடவுளின் மக்களாகவே இருக்கின்றோம்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா திருமகனின் வார்த்தைகளை மனதில் இருத்தும்படி ஆண்டவரே எங்கள் இருதயத்தை திறந்தருளும் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 2:41-52**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உலகமெங்கும் வாழும் மக்களைத் தன் ஒரே குடும்பமாகக்கருதி அனைவரையும் திருஅவையை வழிநடத்தும் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவருடன் பணியாளரான ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள் ஆகிய அனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்திக் காத்தருள வேண்டுமென்று...

திருக்குடும்பத் திருவிழாவை கொண்டாடும் நாமும் இயேசு, மரி, சூசையைப் போன்று நமக்கென்று வாழாமல் பிறர்க்கென்று வாழவும், கிறிஸ்தவ பண்புகளால் நிறைந்த குடும்பங்களாகத் திகழவும், குடும்பவாழ்வின் சவால்களை இறைவார்த்தை செபவாழ்வு கொண்டு வெற்றிபெறவும் வேண்டிய அருள்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது குடும்பங்கள் அனைத்தும் இறையன்பிலும் பிறர் அன்பிலும் வாழவும், அருகிவரும் கூட்டுக் குடும்ப உறவை வளர்க்கவும், பெற்றோர் பிள்ளைகளை தமது கடமைகளை சரிவர நிறைவேற்றி வாழவும், வயோதிபத்தில் பிள்ளைகள் தம் பெற்றோரை ஆதரிக்கவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

# “என்னைத் தேடி வந்த தெய்வம் மண்ணில் மனிதனானது”

திருமகன் பிறந்தார், தெய்வத்திருமகன் பிறந்தார்
திரு அவதாரமெடுத்து,
மனுக்குலத்தை மீட்க மண்ணில் பிறந்தார்.
திக்குதிசையெல்லாம் கொண்டாட்டம்,
தேசமெங்கும் திருநாள் முழக்கம்.
திவ்வியனாய் மனுவுருவெடுத்து,
திவ்விய பாலனாய் பிறந்தார்.

தேவன் பிறந்தநாளிது, பூவுலகம் மகிழும் நாளிது,
தேடும் அன்புத் தெய்வமாய் நம்மைத் தேடிவந்த நாளிது.
தேவாதி தேவன், மூவுலகாளும் மன்னன்
மண்ணில் பிறந்த நாளிது.
தேடி வந்த தெய்வமாய் தேவாசிபுரிந்து
திருவருள்பொழிந்த நாளிது.

பாவ இருளில் உழலும் மக்களுக்கு
பாவமாசகற்றும் மருந்தானாய்
பாரெங்கும் பாடி மகிழ்ந்து கொண்டாடும்
பாச உணர்வை ஊட்டும் பரமனானாய்
பாங்குடன் பல்லவிபாடி, பக்தர்கள் கோடி
பணிந்து வணங்கும் தெய்வமானாய்.
பாதமலர் பணிந்து, பாரெல்லாம்
பாடிப்புகழும் மன்னனானாய்.

மரியின் மைந்தன் மண்ணில் மனுவுருவானார்.
மந்தைகள் தொழுவத்தில் மஞ்சம் கொண்டார்.
மரியன்னை மடியினிலே அரியணை அமைந்தார்.
மன்னவனே! மாபரனே! மானிடரை மீட்க
மனுவுருவெடுத்தார்.
மகிழுகிறது மண்ணும் விண்ணும்,
உன் வரவால் வையகம் வாழ்த்துகிறது.

நமக்கென ஒருபாலன், இந்நானிலத்தில் பிறந்துள்ளார்.
நல்லவர்கள், வல்லவர்கள் வாழ்த்துகின்றனர்,
வணங்குகின்றனர்.
நன்றியால் துதிபாடுகின்றனர்,
நாவால் போற்றிப்புகழ்கின்றனர்.
நல்லவனே! நாயகனே! நாம் பெற்றபேறு நாயகா நீ
நாநிலத்தில் உதிக்க.

சமாதானத்தின் தேவனாய், சகலர்க்கும் சத்தியவானாய்.
சத்தியத்தின் உருவாய், சத்குருவே வந்துதித்தாய்.
சகலகலா வல்லவனாய், சகலர்க்கும் சகலதுமாய்,
சந்தோஷமாய் வாழ்த்துகிறோம், சாஷ்டாங்கமாய்
வணங்குகிறோம்.

வையகம் வரவேற்கிறது, வாழ்த்துப்பாக்கள்
இசைக்கின்றது.
வைரங்கள், முத்துக்கள், நவரத்தினங்கலால் வானகமே
வையகப் பொழுது வரவேற்கின்றது,
வாழ்த்துப்பாடி நடனமாடுகிறது.
வையத்து வாழ்வோரெல்லாம், பண்ணிசைத்து பரமன்
பாதம் பணிகின்றது.

ஆனந்த இராகங்கள் பாடி ஆலயமணிகள்
ஆரவாரத்துடன் ஒலிக்க,
ஆயிரம் தீபங்கலேந்தி ஆடிப்பாடி அகமகிழ்ந்து
ஆனந்தமழையில் நனைவோம்
ஆதியில் வார்த்தையாயிருந்த இறைவன்
அவனியில் அவதரித்தார்.
ஆயிரக்கணக்கான வருடங்களாய் எதிர்பார்த்திருந்த
ஆண்டவன் அடியவர்களை மீட்க அவதாரமெடுத்தார்.

புகழ்ந்து பாடுவோம் பூமிக்கு காலடியெடுத்த
புண்ணியவானை,
புத்தொளி பிறந்தது புனிதா உன்வரவால்
பூமியெங்கும் பூரிக்கிறது.
புதிய பாடல் இசைத்து புகழ்வோம் உம் வரவை
புன்னகைப் பூக்களால் பூமாலை இணைத்து புகழ்வோம்,
போற்றுவோம் இனிய எம் தேவனை

‘வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன்,
என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்’
அவனியில் அவதரித்தார் (எசாயா 9:6)
வாரும் வணங்குவோமே, பாலனை

**அருட்சகோதரி. டெலாறோஸ். அ.கா**

எ



வானகம் விட்டு பூமி வந்தார்
பாவி எம்மை தேடி வந்தார்

என்ன புதுமை, என்ன ஆ

நாளுமே பேரானந்தம்

வாருங்கள் வாழ்த்திப் போற்
இறைவனே மனிதனாய் எம்
பிறந்து விட்டார்

உலகம் படைத்த நாதனுக்கு
பூமிக்கு வர இடம் கிடைக்க
மாட்டுத் தொழுவமோ பேறு
மா மன்னன் பிறக்க இடமளி
எம் உள்ளமும் பேறு பெற்
இறைமகன் வாழ இடமளித்

மானிடர் எம் உள்ளம் அழு
நிறைந்தது ~ அது
தூயவன் பிறப்பினால் தூய்
பாலனைக் காண இடையரு

கிறிஸ்

கவி



மண்ணில் இருந்து பிறக்கும்
மனிதன் வாழ - இன்று
மண்ணகம் வந்து பிறந்தார்
உலகம் ஆழ
மரிமடியினில் தவழும் சின்ன
பாலன்
மகிழ்வுடனே சிரிக்கின்றாரே
அன்பு சீலன்

வானதூதர் பேரணியாய்
வாழ்த்து பாட - இடையர்களும்
குழலுடன் நடனம் ஆட
ஞானியரும் தூபம், பொன்,
போளம் படைக்க
மகிழ்வுடனே இன்று வந்தார்
உலகம் காக்க

நெகிழ்ந்ததுவே மரிமனம் இன்று
பறந்ததுவே சூசையின்

ஏக்கங்
கரங்க
காத்த
உலகப்

உள்ள
கேட்பே
குமுறல்
வாழ்த்
சிறப்ப
கொண்
சின்ன

M

# மகிழும் பாலன் சிரிக்

# ம் இதயத்தில் இறைமகன் பிறந்திடுவார்

~ தேவன்
~ மீட்க
ந்தம்,

றுவோம்
மத்தியில்

வில்லை
பெற்றது
சித்ததால்
டுமே
ந்ததால்

க்கு

மையானது
ம் வந்தனர்

பாராளும் இராஜாக்களும் வந்தனர்
தூய்மையற்ற உளம் படைத்த நாம்
எப்படித்தான் அவரிடம் போவது

கறை படிந்த எம் உள்ளத்தை
கழுவி துடைத்திடுவோம்
பாசத்தையும் நேசத்தையும்
வளர்த்திடுவோம் ~ முட்புதராய் அல்ல
பஞ்சு மெத்தையாய்,
நறுமணம் வீசும் மலராய்
எம் இதயம் இருந்தால் ~ இன்று
மாட்டுத் தொழுவத்தில் அல்ல,
எம் இதயத்தில் இறைமகன் பிறந்திடுவார்

இனிய கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள்

P.M மேரி பெனடிக்கா, பென்ரித்,
அவிசாவளை

# மஸ் தைகள்

களும் அன்று - மகிழ்நிறை
ளில் ஏந்திய பாலனை
னரே
காக்கும் சீலனை

ம் வந்த பாலனை ஏற்க
ம் எமது
களை ஆற்ற
தும் பல உள்ளங்களின்
- இன்று
டாடுவோம்
பாலனின் பிறப்பை

*Merry Christmas*

சகோ. டிலோய்ட்சன் பெர்னான்டோ
தசிய குருமடம், கண்டி

கும் சீலன்



## காலத்தில் நிறைவினில்

காலம் நிறைவுற்ற போது
தன் மகனையே அளிக்கும்
அளவுக்கு உலகின் மேல்
அன்பு கூர்ந்தார் கடவுள்

அன்பே கடவுளாகி
அருளே வடிவமாகி
இறையவன் மனிதனாகி
மண்ணில் மலர்ந்தது
அன்பு, மகிழ்ச்சி, சமாதானம்
நிறைந்த இறையாட்சி
சமூகம் உதயமாகவே
அந்த இறையாட்சி நம் வாழ்வில்
மிளிர்ந்து பாலன் இயேசுவுக்கு
உயர் பரிசாகட்டும்

## சின்னஞ்சிறு வண்ணமலர் பாலன்

அனைத்துலக வேந்தன்
அன்னை மரியின் மடியில்
தவழ்ந்த விந்தை என்ன
தாவீது குலத்தின் வீரசிங்கம்
ஒரு மனிதக் குழந்தையாய்
மண்ணில் மலர்ந்த மாயம் என்ன
பெத்லகேம் மண்வாசம் இங்கும் வீசட்டும்
சவிகத்தமிழில் பண்பாடுவோம்

## நள்ளிரவினில்

அமைதியான அழகான நள்ளிரவினில்
மனித உறவுகளுக்குள்ளும் வாழ்வுக்குள்ளும்
தன்னை நெருக்கமாய் இணைத்துக்
கொண்ட கடவுள்
பாவ இருள் அகற்றி
நம் வாழ்வில் ஒளி தருவாராக
சோகங்கள், ஏக்கங்கள், துயர்கள்
மத்தியிலும்
கடவுள் நம்மோடு என
நம்பிக்கையோடு முழங்குவோமாக

## சந்தோஷ கானமொன்று

மாட்டுத்தொழுவம் ஏழைகள் சார்பான
இயேசுவின் உறுதியான நிலைப்பாடு

நானும் உங்களுள் ஒருவன்
என சொந்தம் கொண்டாடி
நம் வாழ்வில் வசந்தம் வீச வந்த
ஒரு மனிதக் குழந்தையின்
பேரன்பை எண்ணி
விண்ணகத்தூதரோடு நாமும்
சந்தோஷ கானங்கள் பாடுவோம்

த. மேரி பற்றீசியா

# அன்பென்னும் மழையிலே அகிலங்கள் நனையவே

ஆதியிலே வார்த்தையாகி
அந்தமில்லாக் கடவுளாக
சோதியெனி மரியாவிடம்
சுதனேசு அவதரித்தார்

உலகமெங்கும் ஆண்டுகொள்ள
உரிய வரம் பெற்றிருந்தும்,
தொழுவினிலே பிறப்பதற்கு
தூயவரும் சம்மதித்தார்

ஏழ்மையின் பிறப்பிடமாய்
எளிமையின் உறைவிடமாய்
தாழ்மையின் இலக்கணமாய்
தரணியில் வந்துதித்தார்

அன்னையும் பிதாவும்
அளவிட முடியாமல்
தன்னையே வளர்த்துக் கொண்டு
தகைசான்ற புதல்வரானார்

உண்மைக்கு உதாரணமாய்
உயர்வின்போது தாழ்ச்சியுமாய்
பண்பட்ட மகனாக
பரணி போற்ற வாழ்ந்து வந்தார்

கிறிஸ்து பிரான் பிறப்பு விழா
ஆண்டுதோறும் வந்தாலும்
கிறிஸ்தவராய் வாழ்வதற்கோ
நமக்கென்றும் மனமில்லை

அருகினிலே ஓர் ஏழை
உணவின்றி இருக்கையிலே
ஆடம்பர பிறப்பு விழா
கொண்டாடி என்ன பயன்

பலகாலம் உணவின்றி
பாலகர்கள் தவிக்கையிலே
பலகாரம் சுட்டெடுத்து
பரிமாறல் என்ன பயன்?

சிற்றாடை இல்லாமல்
சிறுவர்கள் இருக்கையிலே
பட்டாடை நாம் உடுத்தி
பவனி வந்தால் என்ன பயன்?

பசித்தோரை புசிக்க வைப்போம்
பகைவரையும் அரவணைப்போம்
வசிக்கும் இல்லந்தோறும்
இயேசுவை வாழ்வாக்குவோம்

அன்பென்னும் மழையினிலே
அகிலத்தை நனைய வைப்போம்
தன்போன்று பிறரையும்
நேசித்து வாழ வைப்போம்.



# குட்டி இயேசுவிற்கு என்ன கொடுப்பது?





ஹலோ குட்டீஸ்,

கிறிஸ்து இயேசு குட்டி இயேசுவாக இம்மண்ணில் பிறந்து தவழ்ந்து வருகின்றார். அவருக்கு என்ன பரிசு கொடுக்க போகிறீர்கள்? குட்டீஸ் உங்களை போன்ற ஆறறிவு ஜீவன்களாக இல்லாத காட்டில் வாழும் - புலி, கரடி, சிங்கம், முயல், காகம், குயில் ஆமை, குரங்கு அனைத்தும் ஒன்று கூடி ஒரு கூட்டம் போட்டதாம்.

இதற்கு தலைவன் சிங்கம் தலைமை தாங்கியது. “ஆமா நாமெல்லாம் எதற்காக கூடியுள்ளோம் தெரியுமா சேதி?” என்றது சிங்கம்.

**மற்றவர்கள்:-** “ஆமா ஒன்னும் புரியலே நீங்கதான் தலைவர், நீங்க சொன்னா நாங்களும் கட்டுபடுவோம்.” என்றதாம் அனைத்து மிருகங்களும்.

**சிங்கம்:-** “ஆமா பெத்லகேம் எனும் ஊருல குட்டி இயேசு பாப்பா பிறந்திருக்காரு நாம எல்லாம் போய் பார்த்திட்டு வரலாமா?” என்று ஆலோசனை கேட்டது.

**மற்றவர்கள்:-** “சரி ராஜா நாம எப்படி எப்போது போகலாம்” என்று கேட்டன. “என்ன பரிசு கொண்டு போகலாம்” என்று கேட்டன.

**சிங்கம்:-** “பரிசாக உங்க திறமைக்கேற்வாரு பரிசு எடுத்துக் கொள்ளுங்கள். ஒன்றாக செல்வோம்.”

**மற்றவர்கள்:-** “ஆமா ராஜா நாமெல்லாம் அழகாக நடந்து வேகமாக சென்று விடுவோம்.. ஆனா இந்த காகம், குயில், மயில், கிளி யெல்லாம் எப்படி நம்பகூட வருவாங்க?” என்று கேள்வி கேட்டனர்.

**பறவைகள்:-** “ஆ! நாங்களும் இயேசு பாப்பாவை கண்டிப்பாக பார்ப்போம்” என்றன.

**சிங்கம்:-** உடனே “நாங்க அழகாக கூட்டமா பரிசுபொருள் வாங்கிட்டு போவோம், நீங்க எங்களோடு நடந்து வர முடியுமா?” என்று கேட்டது.

இதனைக் கேட்ட பறவையினங்கள் “ஆமா இயேசு பாப்பா எங்களையும் கண்டிப்பாக பார்ப்பாரு நாங்களும் வருவோம” என்றன.

அன்பர்களே! விலங்கினங்கள் கிளம்பவிருந்த அன்று மழை, மின்னல், இடியுடன் கொட்டியது மழை. அங்கு எந்த விலங்கினங்களும் செல்ல முடியாத நிலை! எங்கும் வெள்ளம்.

அதே வேளையில் பறவைகள் அனைத்தும் பறந்து சென்று குட்டி இயேசு பாப்பாவை மாட்டுதொழுவத்தில் கண்டு வணங்கி தங்களின் வரவை மழலை இயேசுவிடம் பதிவு செய்தன. அங்கு சூசை மாமுனியும் அன்னை மரியாளும் இவர்களின் வருகையை கண்டு ஆனந்தம், பேரானந்தம் கொண்டனர்.

**குட்டீஸ்:-**

மழலை இயேசு பாப்பா, இந்த பறவையினங்களை கண்டு புன்னகை பூத்து “வாருங்கள் தோழர்களே! உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள என் இறையரசில் வந்து அமருங்கள்” என்று மழலை இயேசு தன் இருகரம் விரித்து அவர்களை வரவேற்றார். காகம் - குயில் “குட்டி இயேசு பாப்பா நாங்க கருப்பா இருக்கிறோம்னு எங்களை எங்க காட்டு விலங்கினங்க சேர்க்க மாட்டேனுட்டாங்க!” “ஆனா நாங்க எப்படியும் பார்த்திடுவோம் என்ற பேராவல் எங்களுக்கு இருந்தது. குட்டி இயேசு பாப்பா எங்களையும் தானே கடவுள் படைச்சாரு. நாங்களும் உங்க பிள்ளைங்க தானே! அதான் உங்கள பார்த்து நன்றி சொல்ல இந்த காற்று மழையிலும் பறந்து வந்த விட்டோம். 'Happy Birthday to u' குட்டி இயேசு பாப்பா!” என்று ஆனந்த மழையில் நனைந்தனர். குட்டஸ்.

அந்த சிங்கம் - யானை - கரடி - புலி - குரங்கு - வேட்டைநாய் அனைத்தும் இயேசு பாப்பாவை பார்க்க முடியாமல் மழையில் பயந்து குகையில் பதுங்கி கொண்டன. இயேசு பாப்பாவின் தரிசனம் இவர்களுக்கு கிடைக்க வில்லை. காரணம் இவர்களிடம் “தான்” என்ற அகந்தை குடிக் கொண்டிருந்தது. எனவே தான் மழையுடன் கூடிய மின்னல் வந்து இவர்களை தடுத்துவிட்டது. ஆம் குட்டிஸ் நாம் யாரும் வேற்றுமை பார்க்கக் கூடாது. கடவுளின் படைப்பில் நாம் அனைவரும் சமம்! என்பதை இந்த குட்டி கதை மூலம் அறிந்திருப்பீர்கள்!

குழந்தை இயேசு பாப்பாவுக்கு உங்கள் அன்பு தான் பரிசாக வேண்டும். அனைவரும் கடவுளின் பிள்ளைகள். எனவே உங்கள் இதயமதை புல்லாங்குழல் போல் வெற்றிடமாக இறைமழலை இயேசு பாப்பா வந்து அமரும் ஆலயமாக வைத்து கொள்ள மறைக்கல்வி போதனைகள், உங்கள் வாழ்வாகட்டும்! குழந்தை இயேசுவுக்கு என்ன கொடுப்பது? உன் அருகிலிருக்கும் ஏழை பாப்பாவுக்கு சட்டை வாங்கி கொடுத்தால், அதனை குட்டி இயேசு பாப்பா பார்த்து மகிழ்வார். இது ஒன்றே அவர் விரும்பும் ஆனந்த பரிசு என்பதை உங்கள் பிஞ்சு உள்ளங்களில் பதிவு செய்து 'Happy Christmas' வாழ்த்து கூறி விடை பெறுகின்றேன்.

# குடிலான கூரை வீடு!



ரிட்டோ வழக்கம்போல் வீட்டிற்கு வீடு போய் பால்பாக்கெட்டைப் போட்டுவிட்டு வந்து சேர்ந்தான்.

‘எல்லா வீட்டுக்கும் கரெக்டா பாக்கெட் போட்டுட்டியாடா பிரிட்டோ?’ என்று தாய் தெரசா

‘ஒரு வீடு விடாமப் போட்டுட்டேன் அம்மா, நான் ஸ்கூலுக்குக் கிளம்பணும் குளிக்கப் போறேன்’ என்றான் பிரிட்டோ. ‘போடா போய் முக்கிலே இருக்கிற தெருக் குழாயியே கூட்டமில்லே அங்கே போய் குளிச்சிட்டு வேகமாய் ஓடிவா, சோறு வடிச்சிட்டேன். இப்ப கொஞ்சம் சாப்பிட்டு, டப்பாவிலே கொஞ்சம் எடுத்துிட்டுப் போ’ என்றாள் தாய்.

‘சரிம்மா’ என்று தெருக் குழாக்கு வேகமாய் ஓடினான் பிரிட்டோ. அப்பொழுதுதான் அமலி வேகமாய் வந்தாள்.

‘என்னடி நீ எல்லாம் வீட்டிலேயும் பால் பாக்கெட்டைச் சரியாப் போட்டியா? அந்த மாடி வீட்டு சரஸ்வதியம்மா நேத்துப் போடலேன்னு இங்கே ஓடி கத்திக்கிட்டு வந்துச்சே? அங்கே போட்டியா? என்று கேட்டாள் தாய். போம்மா, நேத்து மறக்காமல் அந்தம்மா வீட்டிலே பால் பாக்கெட் இரண்டையும் போட்டுடேன். எடுத்து வெச்சுக்கிட்டே பொய் சொல்லுதும்மா? என்றாள் அமலி. ‘சரி விடு, நாமலே கஷ்டப்பட்டு அன்றாடங்காய்ச்சி, இதிலே போய் வசதியானவர்களை குத்தம் சொன்னால் அப்புறம் பால் பாக்கெட் வாங்கமபட்டாங்க, நம்ப பொழப்பு கெட்டுப் போகும்டி’ என்றாள் தாய். ‘சரிம்மா, நான் ஸ்கூல் கிளம்புகிறேன், நேரமாச்சு’ என்றாள் அமலி.

“கொஞ்சம் சோறு சாப்பிட்டுப்போடீ” என்றாள் தெரசா. “வேண்டாம்மா, சோறு சாப்பிட்டா நேரமாகும். அப்புறம் அந்த குட்டை ரீச்சர் சிஸ்டர்ட்டே அனுப்பி வெச்சுரும். அவங்க உன்னைக் கூட்டியாரச் சொல்வாங்க. பாவம் நீ எந்த வீட்லே பாத்திரம் கழுவிக்கிட்டிருப்பியோ, பெரிய பிரச்சனை கிளம்புறேன்’ என்று தனது பைதைத் தோளில் போட்டுக் கொண்டு ஓடினாள் அமலி.

பிரிட்டோ குளித்துவிட்டு தலையைத் துவட்டியபடி வந்தான். ‘என்னடா, சோப்புப் போட்டுக் குளிச்சியா?’ என்று கேட்டாள் தெரசா.

‘போம்மா, எனக்கெதுக்கு சோப்பு? சோப்புப் போட்டால் அந்த சோப்பு அழுக்காகிடும்’ என்று சிரித்தான் மகன். ‘என்ன நக்கலா? சரி இந்தச் சாப்பாட்டை அள்ளி வாயிலே போட்டுட்டு கிளம்பு’ என்றாள் தாய் தெரசா.

‘அம்மா, ஒரு முக்கியமான விசயம். நான் கேட்டால் இல்லேன்னு சொல்லக்கூடாது’ என்றான் மகன்.

‘முதல்லே என்னென்னு சொல்லு, பிறகு யோசிக்கிறேன்’ என்றாள் தாய். ‘வேற ஒன்னுமில்லேம்மா, நம்ம பங்கிலே நம்ப பஞுகுச்சாமி கிறிஸ்மஸ்க்கு குடில் போட்டி அறிவிச்சிருக்கார். வீடு வீடாய் குடில் வைக்கணுமாம். அதைப் பார்த்திட்டு பரிசு குடுப்பாங்களாம். பரிசு குடுக்க நம்ப பிஷப் வருவாராம்’ என்றான் பிரிட்டோ சந்தோசமாய்.

‘டேய் துணிமணி எடுக்கவே நம்ப கந்துவட்டி காத்தமுத்துட்டே ஐநூறு கடன் கேட்டிருக்கேன். இதிலே குடில் வைக்க எங்கே போறது?’ என்றாள் தாய்.

“அம்மா, நீ ரொம்பக் குடுக்க வேண்டாம். ஒ ஐம்பது ரூபாய் குடு. நீ தினமும் தீனி வாழங் குடுக்கிறதிலே நான் ஐம்பது ரூபாய் மிச்சம் பண்ணிச் சேர்த்து வைத்திருக்கேன். இரண்டும் சேர்ந்தால் நூறாயிடும். நான் இதை வெச்சு குடில் செஞ்சிருவேன்” என்றான் மகன்.

‘நூறு ரூபாயிலே எப்படிடா குடில் வைப்பாய்?’ என்று வாயில் கையை வைத்தபடி கேட்டாள் வியப்பான தாய். ‘நீ ஐம்பது குடுத்திட்டுப் பாரு, நம்ப வீட்டிலே குடில் இருக்கும். இயேசு பாலன் கட்டாயம் பிறப்பாரு’ என்றான் மகன் பிரிட்டோ. ‘சரி இந்தாப் பிடி, எதையாவது பண்ணித் தொலை’ என்று ஐந்து பத்து ரூபாய்த தாளை நீட்டினாள் தாய். அதை சந்தோதசமாய் வாங்கிக்கொண்டு ஓடினான் பிரிட்டோ.

பங்குத்தந்தை வழக்கம்போல மலர்விழி வீதியில் வீடு வீடாய் குடில் அலங்காரத்தைப் பார்த்தபடி வந்தார். வீட்டுக்கு வீடு அழகான குடில்கள் வசதிக்கேற்ப ஒளிவிளக்கு, வண்ணத் தாளில் குடில், பூக்கள், சிறு சிறு ஸ்டார்கள் என்று ஒரே அமர்க்களமாய் இருந்தது.

தெரசா வீட்டிற்கு வந்தார் பங்குத்தந்தை. ‘எங்கே பிரிட்டோ, நீ வெச்ச குடில்’ என்றார் கூட வந்த உதவித்தந்தை. ‘உள்ளே வாங்க பாதர்’ என்றான் பிரிட்டோ ஆர்வமுடன்....

☛ 15

# கடவுள் நம்மோடு





கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பை ஒவ்வொரு நற்செய்தியாளரும் தமக்கே உரித்தான தனித்துவப் பாணியில் விவரித்துள்ளார்கள்.

லூக்கா மரியாவை மையப்படுத்தியும், யோவான் வார்த்தையை மையப்படுத்தியும், பவுலடியார் கிறிஸ்துவின் தாழ்ச்சி, கீழ்ப்படிதலை மையப்படுத்தியும் (காண்க. பிலி. 2:6-11, கலா 4:4, கொலோ. 1:15-20, 2கொரி. 8:9) எடுத்துரைத்துள்ளார்கள்.

மத்தேயு நற்செய்தியாளரோ யோசேப்பை மையப்படுத்தி நம்மிடையே உறைய வந்த கடவுளின் உடனிருப்பை விளக்குகிறார். ஆண்டவரின் தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி அவருக்கு மரியா மீது ஏற்பட்டிருந்த ஐயப்பாட்டினை நீக்குகிறார். இயேசு பற்றிக் கூறுகிறார். மேலும் இந்தச் சூழலில்தான் முதன் முறையாகப் பழைய ஏற்பாட்டில் எசாயா இறைவாக்கின் மேற்கோளைச் சுட்டிக் காண்பிக்கிறார்.

“இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்” (மத். 1:22-23, எசா. 7:14). இம்மானுவேல் என்றால் ‘கடவுள் நம்முடன் இருக்கிறார்’ என்பது பொருள்.

இந்த இறைவாக்கையும் அதன் விளக்கத்தையும் கேட்ட பிறகே யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெ-ழுகிறார். அவர் உள்ளத்தில் ஏற்பட்ட கலக்கம் நீங்கி-விடுகிறது. எனவே ஆண்டவரின் தூதுர் தமக்குப் பணித்தவாறு தம் மனைவியாகிய மரியாவை ஏற்றுக்-கொள்கிறார்.

யோசேப்பைப் போன்றே நாமும் உள்ளத்தில் ஐயப்பாடுகளுடன் வாழ்கிறோம். பிரச்சினைகளுக்குத் தீர்வு தெரியாது தத்தளிக்கிறோம். ஒருவித உறக்க நிலைதான் நம்மிலும் இன்று காணப்படுகிறது. பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் (எபி. 1:1) யோசேப்பிடம் கனவு வழியாகப் பேசினார். ஆனால் நம்மிடமோ இன்று இந்த இறைவார்தைதை வழியாகப் பேசுகிறார் என எடுத்துக்கொள்வோமா? அப்படியாயின் எசாயாவின் இறைவாக்கினால் அதாவது 7:14 ன்படி நாமும் இன்றைய நெருக்கடியான சூழலிலிருந்து விடுதலையும், தெளிவும், வழியும் பெற வேண்டும். மேலும் யோசேப்பைப் போன்று தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து இறைவனின் திருவுளத்தை ஏற்றுப் பணிதல் வேண்டும். இதற்கு துணையாக எசாயா இறைவாக்கின் பின்னணியை அறிவோம்.

## ஆகாசுக்கு ஆண்டவரின் செய்தி:

யூதா நாட்டின் அரசராக ஆகாசு கி.மு.735 முதல் 715 முடிய ஆட்சி செய்தார். இவரின் ஆட்சியின் போதுதான் வடக்கு அரசாகிய இஸ்ரயேலின் தலைநகர் சமாரியா அசீரியர் படையெடுப்பால் வீழ்ந்தது. இது கி.மு 722ல் நடந்தது. இவ் வீழ்ச்சிக்கு முன்னதாக ஏறக்குறைய கி.மு 734இல் அரசர் ஆகாசுக்கும் யூதாவின் மக்களுக்கும் அச்சத்தை உருவாக்குகின்ற மிரட்டல் விடப்படுகிறது.



எசாயா 7:1ன் படி இரட்சின் என்னும் சிரியா நாட்டு அரசனும், பெக்கா என்னும் இஸ்ரயேல் நாட்டு அரசனும் எருசலேமுக்கு எதிராகப் போர் தொடுத்து அதை வீழ்த்த முயன்றனர். அவர்களால் அது இயலாமல் போகவே, வசனம் 2இன்படி ‘சிரியா எப்ராயிமோடு கூட்ணி அமைத்துக் கொண்டது’ என அறிகிறோம்.

அது ஓர் அரசியல் கூட்டணி, அசாதாரணக் கூட்டணி, அமைதியை விரும்பும் யூதா நாட்டையும் எருசலேம் குடிமக்களையும் அச்சுறுத்தும் கூட்டணி. எனவேதான் இச்செய்தியை தாவீதின் குடும்பத்தார் கேட்வுடனே ‘பெருங்காற்றினால் காட்டு மரங்கள் அலையதிர்வுகொள்வது போல், ஆகாசின் உள்ளமும் அவர் நாட்டு மக்களின் உள்ளங்களும் அலைக்கழி-க்கப்பட்டன’ (எசா. 7:2).

அண்மையில் கஜா புயலின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், குறிப்பாக கடற்கரையோரங்களில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட உயிர் சேதம், பொருட்சேதம், வாழ்வாதார இழப்பு ஆகியவை குறித்து அலறித் துடிக்கின்றோம். இயற்கையின் சீற்றத்திற்குப் பழகிப்போன மக்களுக்கு யதார்த்தத்தின் மீது கோபம் இல்லை.

சுனாமிக்குப் பின்பு சமீப வருட காலமாக புயல், பெருங்காற்று ஆகியவற்றினால் உண்டாகும் அதிர்வுகளும் அழிவுகளும் பேரிழப்பை ஏற்படுத்திவிட்டது. அதைப் போன்றே மக்களின் வாழ்வைப் பாதிக்கின்ற அரசியல் கூட்டணிகள், அரசுகளின் அச்சுறுத்தும் அரசியல் மாற்றங்கள், முடிவுகள், அதனால் பாதிக்கப்படும் நிகழ்வுகள்.. அனைத்துமே ஒருவகையில் சுனாமி, புயல், பெருங்காற்று போன்றவைதான். இதன் பேரழிவுகள் தனி மனிதர்களையும், குடும்பங்களையும், மற்றும் நிலையான அமைப்புகளையும் ஆட்டுவிக்கின்றன, அலைக்கழிக்கின்றன.

அன்று தாவீதின் குடும்பத்தார் குழப்பத்துக்கு ஆளாகியிருந்தது போன்றுதான் இன்று பல்வகை நிலைகளினால் குறிப்பாக சிறுபான்மை மக்கள் உள்ளனர். அச்சுறுத்துகின்ற அரசியல் அமைப்பு, அரசியல் நிலைமைகள், மதவெறி பிடித்த அடிப்படைவாதக் குழுக்களிடையே புரிதல்கள், வெறிபிடித்த கூட்டணிகள், தீவிரவாதம், பயங்கரவாதம்.. இன்னும் பிற நம் உள்ளங்களை கலங்கச் செய்கின்றன.

இதைப் போன்ற அச்சுறுத்தும் பின்னணியில்தான் ஆகாசுக்கு ஆறுதலின் இறைவாக்கு எசாயாவால் அறிவிக்கப்பட்டது. ஆம், வரலாற்றை சில வல்லரசுகள், கொடுங்கோலர்கள் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ள முயல்கின்றனர். அவர்கள் தங்களைவிட ஆற்றல் மிக்க ஒருவர் ‘இறைவன்’ இருக்கின்றார் என்பதை மறந்துவிடுகிறார்கள். ‘அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்’ என்பது முதுமொழி அல்லவா!

ஆகவேதான் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக நிலைப்பாடு எடுக்கும் கடவுள் வரலாற்றில் குறுக்கிடுகிறார். ஆம், “அவர் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடிக்கிறவர். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிகிறவர்” (லூக். 1:51) எனவேதான் இறைவனின் குரலாக எசாயா ஆகாசுக்குச் சொல்கிறார். “நீ அமைதியாய் இரு, அஞ்சாதிரு, நடப்பவற்றை உற்றுப்பார், மனங்கலங்காதே, உன்னை நடுநடுங்கச் செய்யும் திட்டமும், உனக்குப் பதிலாக தயேலின் மகனை அரசனாக்குவோம் என்னும் திட்டமும் நிலைத்து நிற்காது. அது ஒரு போதும் நிறைவேறாது, அவர்கள் விரைவில் தவிடு பொடியாக்கப்படுவர்” (எசா. 7:4-9).

எத்துணை ஆறுதலான நம்பிக்கையூட்டும் செய்தி இது பாருங்கள். இதைத் தொடர்ந்துதான் இறைவன் அதுதான் ‘இம்மானுவேல்’ என்ற கடவுள் நம்முடன் இருக்கிறார் என்ற வாக்குறுதியாகும். அன்று இது அரசியல் வரலாற்றில் நிறைவேறிற்று. வாக்குறுதிகளை நம்புவோரின் வாழ்வில், ‘நம் அரசியல் சூழலில்’ இது நிறைவேறும். இறைவன் தந்துள்ள இந்த வார்த்தை அடையாளத்துடன் நம்பிக்கையோடு போராடி நாமும் ஒத்துழைக்கவேண்டும்.

## கடவுள் நம்மோடு

பழைய ஏற்பாட்டில் வாக்குறுதியாய் நம்மோடு வாழ வந்த கடவுள் புதிய ஏற்பாட்டில் இன்னும் ஆழமாய் அனுபவமாய் நம்மோடு வாழ வந்துள்ளார். உருவம் இல்லாத கடவுள் நம்மோடு எப்படி வாழ வந்தார் என்பதைச் சிந்தித்தால் நமக்கு வியப்புதாள் தோன்றுகிறது. ஆம்

1. “வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார். அவர் அருளும் உண்மையும் நிறைந்தவர். தந்தையின் ஒரே மகன் என்னும் மாட்சி கொண்டவர்” (யோவா. 1:!4). “அவர் மனித உருவில் நம்மிடையே தோன்றியுள்ளார்” (பிலி. 2:7) அவர் மனிதராய் வந்துள்ளார்.

2. அவர் குழந்தையாய் வந்துள்ளார். “இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றி... காண்கின்றோம். இதுவும் ஒரு விந்தை. ஆழ்ந்த பொருளுள்ள சிந்தனை.

3. மூன்றாவதாக, கடவுள் நம்மோடு ஓர் ஏழையாய் வாழ வந்துள்ளார். நமக்கு நம் பெற்றோரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லை. ஆனால் கடவுள் விரும்பியே ஏழைப் பெற்றோருக்கு மகனாய் வந்தார் என்பது ஆச்சரியமே! (காண்க. 2கொரி 8:9, பிலி 2:6-8, விப. 13:2, 12-15, லேவி. 12:8).

நம்மோடு கடவுள் மனிதராக, குழந்தையாக, ஏழையாக வந்துள்ளார். இதை உணரும் இதயம் நமக்கிருந்து, நாமும் மனிதராய், குழந்தையாய், எளிமையாய் விரும்பி வாழ்ந்தால் நம்மில் கடவுள் வாழ்கிறார்.

கடவுளை நம் வாழ்வில் பிறக்கச் செய்வோமா? நம் இதயத்தில் மலரச் செய்வோமா?

❋ ❋ ❋

**புயலடித்தா பயப்பட மாட்டோம்.**
**காத்தடிச்சா பயப்பட மாட்டோம்.**
**நமது வாழ்க்கைப் படகிலே**
**இயேசு இருக்கிறார்.**
**“பயப்படாதே” என்று சொல்லி**
**பாதுகாக்கிறார்!.**

❋ ❋ ❋

# நத்தார் சிறப்பிதழ்





# இளைஞர் யுவதிகளின் கூக்குரல் முன்னிலையில் கண், காதுகளை மூடிக்கொண்டு இருப்பதற்கு திருச்சபைக்கு முடியாது.

## கர்தினால் ஆண்டகை கரிதாஸ் நிறுவனத்தின் 50வது யூபிலி ஆண்டு நிறைவு நிகழ்வின்போது தெரிவித்தார்.





நாளுக்கு நாள் உலகமயமாக்கலின் நிமித்தம் சுயநலம் வேரூன்றி சமூகத்தில் நச்சுத்தன்மை பரவி, செல்வர் மற்றும் வறியவர் மத்தியில் பாரிய இடைவெளியை அதிகரித்து வருகின்றமையே காணக்கூடியதாகவுள்ளது. இளைஞர்களின் புலம்பலை, கூக்குரலை கண்நோக்கி கொண்டு இருப்பதற்கு திருச்சபைக்கு முடியாது. கரிடாஸ் இலங்கை செடெக் நிறுவனத்தை ஆரம்பித்து 50வது வருட நிறைவையொட்டி இடம்பெற்ற நிகழ்வின்போது கர்தினால் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, இலங்கை ஆயர்பேரவையின் தலைவர் ஆயர் மேதகு. வின்சன்ட் எஸ் பர்னாந்து ஆண்டகை கருத்து தெரிவிக்கையில் நீதி, சமாதானம் மற்றும் மனித முன்னேற்றத்திற்காக செடெக் கரிடாஸ் நிறுவனமானது, காயப்பட்டுள்ள வாழ்க்கையை இழந்தவர்கள், யுத்தத்தினால் சீரழிந்தவர்களுக்காக ஆற்றுகின்ற இறைப்பணி குறித்து நான் இறைவனுக்கு நன்றிகூறிக்கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டார். மேலும் இறைவனுக்கு நன்றித்திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

# கிறிஸ்மஸ் மரம்

## குடில், கடவுளின் கனிவைத் தியானிப்பதற்கு உதவி



கிறிஸ்மஸின் வியப்பூட்டும் அடையாளங்களாகிய, கிறிஸ்மஸ் மரமும், கிறிஸ்மஸ் குடிலும், நம் ஒவ்வொருவரோடும் நெருக்கமாக இருக்கும்பொருட்டு, கடவுள் மனிதராகப் பிறந்த பேருண்மையையும், அவரின் ஒளியையும், கனிவையும் தியானிப்பதற்கு உதவுகின்றன என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தை அலங்கரித்து நிற்கும் கிறிஸ்மஸ் மரத்தை வழங்கியவர்கள் மற்றும், கிறிஸ்மஸ் குடிலை அமைத்தவர்கள் என, ஏறத்தாழ 350 பேரை, வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் சந்தித்து, தனது நல்வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்தவேளையில், இவ்வாறு கூறினார்.

விளக்குகளுடன் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்துவே உலகின் மற்றும் ஆன்மாவின் ஒளி என்பதையும், அந்த ஒளி, பகைமையின் இருளை விரட்டி, மன்னிப்புக்கு வழியமைக்கின்றது என்பதையும் உணர்த்துகின்றது என்றுரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். இவ்வாண்டு வத்திக்கான் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள, இருபது மீட்டருக்கு அதிகமான உயரம் கொண்டுள்ள கிறிஸ்மஸ் மரம், தம் மகன் இயேசுவை இவ்வுலகில் பிறக்கச் செய்த கடவுள், மனிதரை, தன்னலம் மற்றும் பாவத்திலிருந்து விடுவித்து, தம்மிடம் ஈர்ப்பதன் அடையாளமாக உள்ளது என்றும், திருத்தந்தை தெரிவித்தார்.

Jesolo கடற்கரை மணலால் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் குடில் உருவங்கள் பற்றியும், தன் சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, எளிமையான பொருளாகிய மண், பெத்லகேம் மாடடை குடிலில், கடவுள், தம் மகன் இயேசுவின் பிறப்பில் வெளிப்படுத்திய எளிமையையும், தாழ்மையையும் உணர்த்துகின்றது என்று கூறினார்.

குழந்தைதன்மை பற்றியும் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் எல்லாரும், கடவுள் முன்னிலையில், சுதந்திரப் பிள்ளைகளாக வாழ்வதற்கு அழைக்கப்படுகிறோம்.

வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், மார்கழி 07ம் திகதி தொடக்கம் ஒளியுடன் மிளிருகின்ற 23 மீட்டர் உயரமுள்ள கிறிஸ்மஸ் மரம், இத்தாலியின் Pordenone மாநிலத்திலுள்ள, Cansiglio வனத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம், 1982ம் ஆண்டில், புனித திருத்தந்தை 2ம் ஜோன் பால் அவர்களால் தொடங்கப்பட்டது.

கிறிஸ்மஸ் குடிலில் வைக்கப்பட்டுள்ள உருவங்கள், இத்தாலியின் வெனிஸ் நகருக்கருகிலுள்ள, Jesolo கடற்கரை மணலால் ஆனவை. 700 டன்கள் மணலால் அமைக்கப்பட்டுள்ள இந்த உருவங்களை, செக் குடியரசு, ஹாலந்து, இரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய நாடுகளைச் சேர்ந்த நான்கு கலைஞர்கள் உருவாக்கினர்.

# புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா மறைப்பாடசாலை பரிசளிப்பு விழா – 2018



கொழும்பு 13, புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய மறைப்பாடசாலையின் பரிசளிப்பு விழா இம்மாதம் முதலாம் திகதி மாலை 3.30 மணிக்கு பங்குமண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக கொழும்பு புனித லூசியாள் ஆலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. ரூபன் மரியதாஸ் cmf அடிகளார் கலந்துகொண்டார். பிரமத அதிதி பரிசில் வழங்குவதையும், எமது பங்குத்தந்தை அருட்பணி. அன்ரனி மார்சிலியார் அடிகளார் மற்றும் எமது மறைப்பாடசாலையின் தலைவி திருமதி. டயானா தீபன் குத்துவிளக்கேற்றுவதையும், மாணவர்களில் வரவேற்று நடனத்தையும் படத்தில் காணலாம்.

**தகவல் : S.P பர்னாந்து. படம் J. பர்னாந்து**

# இரத்தினபுரி புனித இராயப்பர் – சின்னப்பர் பேராலயத்தில் 09-12-2018 புபுது சங்கத்தினரால் நடாத்தப்பட்ட திருவருகைக்கால மூன்றாம் வார வழிபாடுகள்

இயேசு ஆண்டவரே! வருக! வருக!

இரத்தினபுரி புனித இராயப்பர் - சின்னப்பர் பேராலயத்தில் கடந்த 09-12-2018 ஞாயிறன்று புபுது சங்கத்தினரால் திருவருகைக்கால மூன்றாம் வார வழிபாடுகளை மிக சிறப்பாக சமாதானத்தை மையமாக வைத்து ஏற்பாடு செய்திருந்தனர். சிறுவர்கள் சமாதானம், பொறுமை, அமைதி - செபம் போன்ற சுலோகங்களுடன் திரு பீடத்தை நோக்கி திருப்பலி ஆரம்ப பவனியை மேற்கொண்டமை அனைவரது மனதையும் கவர்ந்த ஒரு விடயம் என குறிப்பிடலாம்.

இந்த மனமாற்றத்தை - ஏற்படுத்திய புபுது சங்கத்தினருக்கு பங்கு குருவானவர் அருட்பணி என்ஸ்லி சுரங்க அடிகளார் தமது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

எங்கும் - எதிலும் - என்றும் சமாதானம் நிலவ அனைவரும் பிரார்த்திப்போம்.




தொகுப்பு:– மேரி இருதயநாதன், பேராலயம், இரத்தினபுரி



கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் 12 அருட்சகோதரர்கள் தமது குருத்துவ அழைத்தலுக்கான இறுதி நிலையான அதாவது தியாக்கோன் பட்டத்தை இம்மாதம் 8ம் திகதி தேவத்தை தேசிய இலங்கை இராக்கினி பேராலயத்தில் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார்கள்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



உலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் வரலாறு இருக்கிறது. இது பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற மூன்று பகுதிகளாக வகுக்கப்படுகிறது. ஆனால் கிறிஸ்துவின் வரலாற்றுக்கு மட்டுமே விதிவிலக்கு உண்டு. இவரின் பிறப்பு வித்தியாசமானதாகவும் வேறுபட்டதாகவும் இருக்கிறது. இது இவரின் பிறப்பில் இருந்து தொடங்காது, உயிர்ப்பில் இருந்து ஆரம்பமாகிறது.

# பிறப்பிலே புதைந்த புதிர்கள்

அருட்தந்தை அ. பிலிப் அடிகளார்
(i.v.Dei)

## 1. இயேசு அறியப்படாதவராக பிறந்தவர்

இயேசு பிறந்தபோது இவரின் தனித்துவத்தை மக்களுள் எவரும் அடையாளம் காணவில்லை. இவர்களின் கண்களுக்கு இவர் மறைக்கப்பட்டவராகவே பிறந்தார். தன் பகிரங்க வாழ்வைத் தொடங்கும்வரை 30 ஆண்டுகள் நாசரேத்தில் மறைவாகவே வாழ்ந்தார். திருமுழுக்குப் பெற்ற பின்னரே நசரேத்தூர் இயேசு என்ற அடையாளத்தைப் பெற்றார். இவரின் புரட்சிப் போதனைகளும் புதுமைகளும் இவரை மற்றவர்களைவிட வித்தியாசமானவராக மக்களுக்கு எடுத்துக் காட்டின.









இதனால் பலர் இவரைப் பின்தொடர்ந்தார்கள். இவரை மெசியாவாகவும் ஏற்றுக்கொண்டார்கள். இவரோ யூத மறைத் தலைவர்களுக்கு ஒரு பெரும் சவாலாக இருந்தார். இதனால் இவர்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் உள்ளானார். இவரை மறைத்துரோகியாகவும், சமூகத் துரோகியாகவும் முத்திரை குத்தி சிலுவையில் அறைந்து கொன்றார்கள். ஆனால் இவரோ தன் இறப்பில் இருந்து மூன்றாம் நாள் வெற்றி வீரராக உயிர்த்தெழுந்தார்.

இதன் பின்னரே இவரைப் பின்பற்றியவர்கள் இவரின் வாழ்க்கை வரலாற்றை சிந்திக்கத் தொடங்கினார்கள். உயிர்ப்பால் ஆட்கொள்ளப்பட்ட இவர்கள் இவ்வுயிர்ப்பின் பின்னணியில் இவர்தான் ஆண்டவராகிய மெசியா என்ற உண்மையை நம்பிக்கையாக வெளியிட்டார்கள். இவர் தன் வாழ்வில் சொன்னவைகளையும் செய்தவைகளையும் பின்னோக்கிப் பார்த்து முதலில் வாய்மொழியாகவும் பின்னர் எழுத்துருவமாகவும் தொகுத்தார்கள். இதன் பின்னரே இறுதியாக இவரின் பிறப்பைப் பற்றியும் வாழ்வின் நிகழ்வுகளை நற்செய்தியாளர்கள் அவரின் பிறப்பு, வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம் என்ற வரிசையில் எழுதித் தந்துள்ளார்கள்.

லூக்கா, மத்தேயு ஆகிய இரு நற்செய்தியாளர்கள் மட்டுமே இயேசுவின் பிறப்பை தொகுத்துத் தந்துள்ளார்கள். இவ்விரு அறிக்கைகளையும் வாசிக்கும் ஒருவர் இவை இரண்டும் இயேசுவின் பிறப்பை இருவேறு கோணங்களில் கணிப்பதை தெரிந்துகொள்வார். இவ்வொரே விடயத்தை லூக்கா தனக்கே உரித்தான வரலாற்றுப் பின்னணியிலும், மத்தேயு தன் பார்வையில் பழைய ஏற்பாட்டு பின்னணியிலும் பதிவு செய்கிறார்கள்.

## 2. இயேசு வரலாற்று நாயகன்

லூக்கா இயேசுவின் பிறப்பை ஒரு வரலாற்று நிகழ்வாகப் பதிவுசெய்கிறார். உரோமைப் பேரரசர் அகஸ்துஸ் செசார் ஆட்சியில் இருந்தபோது தன் ஆட்சிக்கு உட்பட்ட மக்களின் எண்ணிக்கையை அறிய விரும்பினார். இதனால் ஒரு கணக்கெடுப்புக்கு உத்தரவிட்டார். தம் பெயர்களைப் பதிவுசெய்ய யோசேப்பு மரியாவோடு பெத்லகேம் சென்றபோதே இயேசு அங்கே பிறந்தார் என்று, இயேசுவின் பிறப்பை இவர் வரலாற்றில் பதிவுசெய்கிறார் (லூக் 2:1-5) இது எவ்வளவுக்கு உண்மையானது என்பதை வரலாற்றாளர்கள் பின்னிட்ட காலத்தில் வரலாற்றையே கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்று பிரித்துக் காட்டுகிறார்கள். ஏழைகளை மையப்படுத்தி அவர்களுக்கு முன்னுரிமையும் முதலிடம் கொடுத்து வரையும் தன் நற்செய்தியில் லூக்கா இயேசுவின் பிறப்பில் ஏழைகளான இடையர்களுக்கு முன்னுரிமை வழங்குவதிலும் (லூக் 2:8-15) பின்நிற்கவில்லை.

மத்தேயு இயேசுவின் பிறப்பை வரையும்போது, இவரை பழைய ஏற்பாட்டு பாத்திரங்களாகப் பார்க்கின்றார். இயேசுவின் பிறப்பின் முக்கிய விடயங்களை இவர் பழைய ஏற்பாட்டில் நிகழ்ந்த சில நிகழ்வுகளின் பின்னணியில் சிந்திக்கத் தூண்டுகிறார்.

## 3. இயேசு புதிய யாக்கோபு

மத்தேயு இயேசுவின் பிறப்பைப் பதிவுசெய்யும் போது, வானிலே ஒரு அதிசய நட்சத்திரம் தோன்றியதைப் பதிவு செய்கிறார். நட்சத்திரம் என்ற சொல் விண்மீனைக் குறிப்பதோடு பெயர்பெற்ற ஒரு தலைவரையும் குறிக்கும் என்பது நமக்குத் தெரிந்ததே. ஈசாய் என்ற மரத்தின் அடியில் இருந்து துளிர் ஒன்று வெளிவரும். இது வளர்ந்து கனிதரும் என்று (எசா 11:1) எசாயா இறைவாக்கினர் குறிப்பிடுகின்றார். இத்துளிர் யூதர்கள் எதிர்பார்த்த மெசியாவையே குறிக்கிறது. இவரே யாக்கோபின் கோத்திரக் கொழுந்தாகவும், நட்சத்திரமாகவும் இருக்கிறார் என்று பொருள்படுகிறார்.

கஸ்பார், வெலிச்சோர், பல்த்தசார் என்ற மூன்று ஞானிகளை வழிகாட்டி மாட்டுத் தொழுவத்துக்குக் கூட்டிக்கொண்டுவந்த நட்சத்திரம் வேறு யாருமல்ல இயேசுதான் என்பதை மத்தேயு மறைவாக எடுத்துக்காட்டுகின்றார். இவ்வாறு பன்னிரெண்டு கோத்திரங்களுக்குத் தலைவரான யாக்கோபுவை இப்பாலகனில் பார்க்குமாறு மத்தேயு அழைப்புவிடுக்கிறார். இவரே பின்னிட்ட காலத்தில் பன்னிரெண்டு திருத்தூதரைக் கொண்டு இறையாட்சிப் பணியை முன்னெடுக்கப்போகிறார் என்பதை முன்னரே குறித்துக் காட்டுகிறார்.

## 4. இயேசு புதிய சாலமோன்

சாலமோன் அரசர் ஞானத்துக்குப் பெயர் போனவராக இருந்தார். இவரின் ஞானத்தைக் காண பல அரசர்கள் தூரத்தொலைவில் இருந்து இவரைத் தேடி வந்தார்கள். இவரின் ஞானத்தைக் கண்டு வியந்து வெகுமதிகளையும் விலை உயர்ந்த பொருட்களையும் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தார்கள். இவர்களில் சேபா நாட்டு அரசி முக்கிய இடம் பெறுகிறார் (1 அர 10:1)

தூரத் தொலைவில் இருந்து குழந்தை இயேசுவைக் காண வந்த மூன்று ஞானிகள் பொன், தூபம், வெள்ளைப்போளம் என்ற விலை உயர்ந்த பொருட்களைப் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தார்கள். இவர்களின் இச்செயலைக் காணும் ஒருவரை, மாட்டுத் தொழுவத்தில் உள்ள தீவனத் தொட்டியில் கிடத்தியிருக்கும் பாலகனின் சாலமோன் அரசரைப் பார்க்குமாறு மத்தேயு தூண்டுகின்றார். அரசர்கள் சாலமோனுக்கு பரிசுகள் கொடுக்க வந்த பின்னணியிலே மூன்று ஞானிகளும் மூன்று அரசர்களாக உருவகப்படுத்தப்படுகிறார்கள். மத்தேயு இவர்களை அரசர்கள் என்று அல்ல, ஞானிகள் என்றே குறிப்பிடுகிறார்.

## 5. இயேசு புதிய மோசே

இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சியை வரையும் மத்தேயு, ஞானிகள் சிற்றரசனான ஏரோதுவைச் சந்தித்ததையும் அவனுக்கு அவர்கள் யூதரின் அரசர் பிறந்துள்ளார் என்ற செய்தியைக் கொடுப்பதையும் பதிவுசெய்கிறார். இதனால் தன் பதவிக்கு ஆபத்து வந்துள்ளது என்பதை உணர்ந்த ஏரோது பிறந்திருக்கும் யூதரின் அரசரைக் கொல்ல உத்தரவிடுகிறான். ஒரு ஆண் குழந்தைக்காக ஒட்டுமொத்தமாக எல்லா ஆண் குழந்தைகளும் கொல்லப்படுகிற நிகழ்வால் மத்தேயு தன் வாசகரை பழைய ஏற்பாட்டில் நடந்தேறிய இதேபோன்ற நிகழ்வொன்றுக்கு அழைத்துச் செல்கிறார்.

எகிப்தில் எபிரேயர் பலுகிப் பெருகியதால் அச்சமுற்ற பார்வோன் மன்னன் எகிப்தியரின் ஆண் குழந்தைகள் அனைவரையும் கொன்று நைல் நதியில் வீச உத்தரவிட்டான். இவ்வாறு குழந்தைகளின் இரத்தத்தால் ஆற்று நீர் செந்நிறமானது. எபிரேயரின் ஒரே ஒரு குழந்தை மட்டுமே இக்கொலைப் பாதகத்தில் இருந்து தப்பியது. இக்குழந்தைதான் மோசே. குழந்தைகளின் இரத்தத்தால் தப்பிய மோசேயைப் போன்று இயேசுவும் மாசில்லாக் குழந்தைகளின் இரத்தத்தால் தப்பிப் பிழைக்கும் இயேசுவை புதிய மோசேயுவாக அறிமுகம் செய்கிறார். எபிரேயருக்கு மோசே எவ்வாறு விடுதலை வாங்கிக் கொடுத்தாரோ அவ்வாறே புதிய ஏற்பாட்டின் இறைமக்களுக்கு இயேசு பாவத்தில் இருந்து விடுதலை வாங்கிக் கொடுக்கிறார் என்ற மாபெரும் உண்மையை இதனால் மத்தேயு தெரியப்படுத்துகின்றார்.

# நத்தார் சிறப்பிதழ்









# யூதா நாட்டு பெத்லகேம்







"வாருங்கள் நாம் பெத்லகேமுக்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்திருக்கிற இந்த நிகழ்ச்சியைப் பார்ப்போம்" (லூக். 2:15) என்ற எதிர் நோக்கோடு பெத்லகேம் பற்றி பார்ப்போம்.

பெத் + லெகேம் என்ற இரு எபிரேயச் சொற்கள் சேர்ந்துதான் பெத்லகேம் என்ற வார்த்தை உருவானது. "பெத்" என்றால் வீடு, "லெகேம்" என்றால் உணவு அல்லது அப்பம் என்று பொருள். இதுவே அரபிய மொழியில் "பைத்லாமின்" என்று அழைக்கப்படும். பைத்லாமின் என்பதன் பொருள் "மாமிச வீடு" இப்பொருளை அப்ப, உணவு, உடல் போன்ற மறை உண்மைகளைக் குறிப்பிடலாம். சண்டை நடக்கும் இடம், வகுவின் வீடு என்றும் பல பொருள்களில் காணப்படுகின்றது.

இயேசு பிறந்த பெத்லகேமுக்கும் அவர் ஏற்படுத்த போகும் விண்ணரசிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை காணலாம். பெத்லகேம் என்ற அப்ப வீட்டில் உணவு கிடைக்கும் இடத்தில் கடவுளின் மகன் இயேசு பிறந்தது தேவப் பராமரிப்பின் மிகப் பெரிய வரலாற்று நிகழ்ச்சியாகும்.

இது யூதாவில் உள்ள ஒரு நகரம் தாவீதின் உறைவிடமும், இயேசுவின் பிறப்பிடமும் ஆகும். இந்நகரம் சில சமயங்களில் யூதா நாட்டு பெத்லகேம் என்று குறிப்பிடப்படுகின்றது. (நீதி தலைவர்கள் 17:7-9, 19:1-2, 18, ரூத். 1:1-2, 1சாமு. 7:12) யூதா நாட்டு பெத்லகேம் என்பதற்கு மேற்கூறியவை சான்றுகளாகும்.

செபுலோன் பகுதியில் இதே பெயரைக் கொண்ட நகரம் இருப்பதால் இதிலிருந்து பேறுபடுத்திக் காட்ட யூதா நாட்டு பெத்லகேம் என்று கூறப்படுகின்றது. இந்நகர் எருசலேமை எபிரோன், நெகோபு போன்ற நகர்களோடு இணைகின்ற தென் வட நாலைக்கருகில், எருசலேமிற்குத் தெற்கு 10 கி.மீ தொலைவில் இருக்கிறது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமர்னாவின் கடிதங்களில் ஒன்றில், முதன் முதலில் "பெத்லகேம்" பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கி.பி. 14ஆம் நூற்றாண்டிலிருந்தே எபிரேயர் வாழ்ந்து வந்ததற்கான எபிரேய சான்றுகள் உள்ளமையால் இது மிகப் பழமையான நகரம்.

தொடக்கநூல் 35:19, 40:7 இல் பெத்லகேம் நகரானது ராகேலை அடக்கம் செய்த இடமாகிய எப்ராத்தாவோடு ஒப்புமைப்படுத்தப்படுகிறது. இந்தக் கணிப்பு பெத்லகேம் நகரில் எப்ராத்தா குலத்தவர்கள் வந்து குடியேறிய பின்புதான் ஏற்பட்டிருக்க வேண்டும் ஏனெனில் ராகேலை அடக்கம் செய்த நகராகிய எப்ராத்தா வட பெத்லகேம் நகருக்கு அப்பால் இருப்பதாகக் கூறப்படுகிறது. லேவி ஒருவரின் உறைவிடமுமாகும் (நீதி.தலை. 17: 7-9, தொநூ. 19:1) இல் இதுவே ரூத் நூலின் பின்னணியாகும் (ரூத். 1:1-2, 19:24, 2:4, 4:11).

தாவீதின் உறைவிடமும் ஆகும். இந்த நகரிலேதான் சாமுவேலால் தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டார் (1சாமு. 16:1-13). மேலும் இது எல்கானாவின் உறைவிடமாகவும், அசாவேல் இங்குதான் புதைக்கப்பட்டார். (2சாமு. 2:32) என்று வரலாற்றில் காணக்கூடியதாக உள்ளது.

பெத்லகேம் இயேசுவின் பிறப்பிடமென முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது (மீக். 5:2) இன்று இங்கு இயேசு பிறந்தாரென அறிவிக்க அவர் பிறந்த அதே இடத்தில் ஒரு வெள்ளியான விண்மீனைப் பதித்துள்ளனர். அதில் "இங்கே கன்னி மரியாளிடமிருந்து இயேசு பிறந்தார்" என இலத்தின் மொழியில் எழுதி வைத்துள்ளனர்.

இதன் அருகாமைக் கடியில் அமைந்துள்ள விவிலிய வல்லுனர் ஏரோத் (420) அவருடைய நண்பர்கள் பவுலா (404) யுசே பியசு (423) ஆகியோரின் கல்லறைகள் இவ்வுண்மையை மேலும் உறுதிப்படுத்துகின்றன. இதற்கு சான்றாக தீவனத் தொட்டியை விவிலியம் அறிமுகம் செய்கிறது.

"∵பாத்னே" என்ற கிரேக்க சொல் முன்பு மாட்டுக் கொட்டிலென மொழி பெயர்க்கப்பட்டது. இப்பொழுது அதை தீவனத் தொட்டியெனக் கண்டறிந்துள்ளனர். தீவன் தொட்டியை மாட்டுத் தொழுவத்தில் பார்த்ததால் இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தாரெனக் கணித்தனர். ஏனெனில் மக்கள் தங்கள் கால்நடைகளை வீட்டருகேயுள்ள குகைகளில் வளர்த்தனர்.

புண்ணிய பூமி மலைப்பாகங்களின் இடமாகையால் அங்கு ஏராளமான குகைகள் உள்ளன. அவைகள் பாளையம் இறங்குமளவு விரிவாகவும், பதுங்குமளவு சிறிதாகவும், இறந்தவரை அடக்கம் செய்ய ஆழமானதாகவும் இருந்தன. ஒரே குகையில் உயர்ந்த இடத்தில் மக்கள் வசித்தனர். தாழ்வுப் பகுதியில் விலங்குகளை அடைத்தனர். தங்கள் தேவைகளுக்கு குகைகளை பயன்படுத்தினர்.

இது போன்ற ஒரு குகையில் பாலன் பிறந்தார், மற்றொன்றில் அவர் கிடத்தப்பட்டவர் என மரபு சொல்கிறது. கி.பி. 150 இல் வாழ்ந்த மறைசாட்சியான யூஸ்தினார் இங்குள்ள மரபுச்சின்னமே இயேசு பிறந்த இடம் எனச் சான்று பகர்கின்றார். இதைத் திருத்தலமெனக் கருதி ஆதிக்கிறிஸ்தவர்கள் திருப்பயணம் செய்திருக்கின்றனர்.

இதன் புனிதத்தைச் சீர்குலைக்க உரோமைப் பேரரசன் அட்ரியன் (கி.பி 135) பல சூழ்ச்சிகள் செய்துள்ளான். அதே இடத்தில் கான்ஸ்டன்டைன் பேரரசர் (கி.பி 325) எண் கோண வடிவில் பேராலயம் ஒன்றை கட்டினார். பின்பு (கி.பி 521-528) சமாரியக் கிளர்ச்சி இதை தரைமட்டமாக்கியது. பின்பு முதலாம் யூஸ்தினியன் (கி.பி. 527-565) என்பவர் பழைய ஆலயத்தின் மேல் பேராலயம் கட்டினார். இதுவே இன்றும் நாம் காணும் கோவிலாகும்.

இந்த ஆலயத்தின் முகவாயில் மிகச்சிறியது. காரணம் இதன் புனிதத் தன்மையை பாதுகாக்கும் பொருட்டு தாழ்ச்சியோடு நுழைபவரே பாலனை தொழ முடியும் என அடையாளப்படுத்தவும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கிறிஸ்து பிறப்பு விழா ஆண்டு தோறும் மும்முறை கொண்டாடப்படுகின்றது.

நான் பிறந்து 2018 ஆண்டுகளாகிலும் இன்று மக்களின் மனங்களில் எனக்கோர் நிரந்தர இடம் கிடைக்க வில்லை ஏன்?

பாலனின் பிறப்பை உள்ளத்தில் பிறக்க வைத்து கொண்டாடுவதே சிறந்த கிறிஸ்மஸ் விழா.

அருட்சகோதரர். றொஷான்
புனித யோசேவாஸ் இறையியல் கல்வியகம்
புனித ஆசீர்வாதப்பர்
குருமடம். இலுக்கென.

# கிறிஸ்மஸ் மரம்

மேலை நாடுகளில் கிறிஸ்மஸ் மரம், இல்லாத கிறிஸ்து பிறப்பு பெருவிழா என்பது நினைத்துக் கூட பார்க்க இயலாத ஒன்று. கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்து பிறப்பு பெருவிழாவின் அலங்காரப் பொருள்களாக கி.பி 7ஆம் நூற்றாண்டுகளில் ஜெர்மன் நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்டது.



பிறகு வட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற கண்டங்களுக்கும், உலகில் மற்ற இடங்களுக்கும், கிறிஸ்து பிறப்பு கிறிஸ்மஸ் மரம் மட்டுமே. கிறிஸ்து பிறந்த குளிர் காலத்தில், பசுமையாக தோற்றம் அளிப்பதையும், குடும்பங்களோடு இணைந்து பரிசுப் பொருள்களை பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ற ஒரு மரமாயும், காட்சியளித்தது. மற்ற மரங்கள் எல்லாம் காய்ந்து சருகாகும் நிலையில் மேலை நாடுகளில் கிறிஸ்மஸ் மரம் மட்டுமே, பசுமையாக இருந்தது. வாழ்க்கையின் வசந்தத்தையும், நம்பிக்கையையும் எடுத்து இயம்பும், சின்னமாக மக்களால் கருதப்பட்டது.

எப்பொழுதும் பசுமை தோற்றம் அளிக்கும் இந்த கிறிஸ்துவின் பிறப்பு தங்கள் வாழ்க்கையில் எந்நாளும் பசுமையான செழிப்பான வரங்களைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் உள்ளத்தில் விதைப்பதோடு, பரிசு பொருள்களையும், வண்ண ஒளி விளக்குகளையும் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளிக்கும் பல வண்ண அலங்கார பொருள்களுடன் கிறிஸ்மஸ் மரம் என்று அழைக்கப்படும் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

# கிறிஸ்மஸ் நட்சத்திரம்

வடக்கு ஐரோப்பிய நாட்டு மக்களின் நம்பிக்கையின் படி கிறிஸ்மஸ் விழாவுக்கும் திருக்காட்சி விழாவுக்கும் இடைப்பட்ட 12 நாட்களில் தீய சக்திகளின் ஆதிக்கம் அதிகமிருக்கும் என கருதப்பட்டது. எனவே அவற்றை எதிர்கொள்ள வீடுகளில் ஒளியேற்றிவைக்கும் பழக்கம் இருந்து வந்தது. இதனை பின்பற்றி கிறிஸ்தவர்களும், கிறிஸ்து பாவமாகிய இருளை வெற்றி கொள்ள வருகின்றார் என்பதை குறிப்பதற்காக வீடுகளில் விண்மீன் வடிவத்தில் ஒளியேற்றி வைக்கத் தொடங்கினர்.

# கெரோல்



கெரோல் என்ற சொல் சாக்ளின் மொழியில் இருந்து வருகிறது. இந்த சொல்லின் அர்த்தம், சுற்றி இருந்து கொண்டு ஆடிய வண்ணம் பாடுவது. கி.பி. 11ம் நூற்றாண்டில் வீடு வீடாக கெரோல் பாடிச் செல்லும். பழக்கம் தோன்றியது.





## 02 இலங்கை ஆயர்...

உள்ளத்திலிருந்து ஏற்றுக்கொள்ளும் போது தான் நத்தாரின் உண்மையான மகிழச்சி மிளிரும்.

நாம் பல இரக்கச் செயல்களில் ஈடுபடும்போது எமது நாட்டிலுள்ள எளிமையான மக்களின் தேவைகள் குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இயேசுவைப்போல் அவரது எளிமையான பிறப்பைப் போல் நாமும் எளியவர்கள் குறித்து தாழ்வுள்ளத்துடன் அவர்களுக்கு உதவவேண்டும். பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்குவதன் மூலம் மட்டுமே வறுமை பற்றிய கேள்விகளை நீக்க முடியும்.

மனிதர்களின் உண்மையான அபிவிருத்தி பரஸ்பர மரியாதை, நீதி மற்றும் சமாதானம் நிலவுகின்ற ஒரு சமுதாயத்தில் மட்டுமே நடக்கும். நம் நாட்டில் இந்த சூழலை உருவாக்குவதற்கு அனைவருக்கும் ஓர் உண்மையான கடமை வேண்டும்.

பொதுவான நன்மைகளை தடுக்கக்கூடிய சிறிய வேறுபாடுகளை மறந்து, அமைதி, ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றின் முகவர்களாக இருப்பதன் மூலம், இறைவனின் திட்டத்திற்கு ஏற்ப அமையாத அனைத்தையும் மாற்றியமைப்போம். இனிய வாழ்க்கையை எமக்கு பரிசாகத் தந்த இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துகையில் நம் அனைவருக்கும் ஆவியானவர் அவருடைய உயிர்த்தெழுதல் சாட்சிகளைப் புதுப்பிப்பார்.

நம் விசுவாசமுள்ள இறைமக்கள் அனைவருக்கும் நம் சக குடிமக்களுக்கும், நல்லெண்ணமுடைய எல்லா ஆண்களுக்கும் பெண்களுககும் ஆசீர்வதிக்கப்பட்ட இனிய நத்தார் வாழ்த்துக்கள்.

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS, தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ், பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## 02 சர்வமத...

கரிட்டாஸ் - செத்மினி - இரத்தினபுரி மறைமாவட்டத்தில் இருந்து கண்டி மறைமாவட்டத்துக்கு கடந்த 26ம் திகதி தொடக்கம் 29ம் திகதிவரை இரத்தினபுரி கரிட்டாஸ் - செத்மினி நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது சர்வமத சமாதான உறவின் பாலத்தை ஸ்திரப்படுத்தும் பயணமாகும். இரத்தினபுரி மறைமாவட்டத்துக்கு வருகை தந்திருந்த அதே அன்பு நெஞ்சங்கள் எம்மை அன்புடன் வரவேற்று, தமது வீடுகளிலே தங்க வைத்து உபசரித்தமை பெரும் பெருமைக்குரிய விடயமாகும். எம்மை புனித தலதா மாளிகைக்கும், கண்டி மறைமாவட்ட புனித அந்தோனியார் பேராலயத்துக்கும் செல்ல விநாயகர் கோவிலுக்கும் இறுதியாக கண்டி மஸ்ஜித் இஸ்லாமிய பெரிய பள்ளிவாசலுக்கும் அழைந்திருந்தப் போது அங்கு எம்மை வரவேற்ற நேரம் கௌரவ மௌலவிமார்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை காண்கின்றோம்.

எம்மதமும் சம்மதமே!
என் மதமும் அம்மதமே!

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி**

## 10 குடிலான...

அனைவரும் அந்தக் கூரை வீட்டின் உள்ளே ஆர்வமுடன் நுழைந்தனர். ஒரு சிறிய ஸ்டீல் பலகையில் வைக்கோலைப் பரப்பி, அதில் குழந்தை யேசு சுருபம், அருகில் சூசை, மாதா சுரூபம் இருந்தது. இரண்டு மாடு, ஆடு, ஒரு சம்மனசு இருந்தது. ஓரத்தில் ஸ்டார் இருந்தது.

‘என்ன பிரிட்டோ, குடில் இப்படி இருக்கு? ஒரு ஜோடனையும் இல்லையா?’ என்றார் கூட வந்த சிஸ்டர் சிரித்தபடி.‘ சிஸ்டர், எங்க வீடே கூரைதான். இதுவே ஓர் குடில் மாதிரி. இந்த குடில்லே வைக்கோல் கிடக்கும். மாட்டுக்கொட்டகையில் யேசு பாலன் பிறந்திருக்கார் சிஸ்டர். நீங்க எங்க வீட்டையே குடிலா நினைச்சுக்கங்க’ என்றான் சிறுவன் பிரிட்டோ.

‘ஆமாம் பாதர், ஐம்பது ரூபாய்க்கு இந்த சுரூபங்களை மட்டும் வாங்கி இப்படி வெச்சிருக்கான் பிரிட்டோ’ என்றாள் தாய் பங்குத்தந்தையிடம். ‘எங்களால் முடிஞ்ச குடில் செட் இதுதான் சாமி’ என்றாள் அமலி. பங்குத்தந்தைக்கு ஒரே வியப்பு.

‘வெரிகுட் பிரிட்டோ, உன்னுடைய யோசனை ஆர்வம், விசுவாசம் முயற்சியைப் பாராட்டுகிறேன். இந்த முறை உனக்குத்தான் முதல் பரிசு. நிச்சயம் இங்கதான் இயேசு பாலன் பிறந்திருக்கார்’ என்று பிரிட்டோவை பாதர் அணைத்துக்கொண்டார்.

## 03 வரலாறு படைத்த...

அதிகார வர்க்கத்திற்குப் பணம் படைத்தவரும் இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்படவில்லை. விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட இடையர்களைப் போன்ற ஏழை எளியவர்களுக்குத் தான் அறிவிக்கப்பட்டது.

“இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார் (லூக் 2:11). ஆகவே இயேசுவின் பிறப்பு எல்லோருக்குமான பிறப்பு, அதுவும் கடைநிலையில் வாழ்ந்தோருக்கான சிறப்பு பிறப்பாகும்.

எனவே கிறிஸ்து பிறப்பு பெருவிழா என்பது கடவுள் நம்மீது கொண்ட நிபந்தனையற்ற அன்பைக் கொண்டாடும் விழா. கிறிஸ்து பிறப்பு விழா நமக்குத் தரும் செய்தி அன்பு, தியாகம், மகிழ்ச்சி, கடவுள் நம்மை அன்பு செய்கிறார் அதனால் தன் மகனையே தியாகம் செய்தார். சுயநலம், பண்மை, வெறுப்பு, பணம், பதவி, புகழ் என்று வாழ்கின்ற இன்றைய சமுதாயத்திலே அன்பும், தியாகமும் இருந்தால் இந்த உலகில் எதுவும் சாத்தியம் என்பதை இயேசுவின் பிறப்பு எடுத்துக்காட்டுகின்றது.

ஆகவே நாமும் அன்பு செய்வோம், தியாகம் செய்வோம், பகிர்ந்து கொள்வோம், மகிழ்ச்சி கொள்வோம். கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடுவோம்.

## 06 வெளிச்சம்

என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்து தொடர்ந்தன. இறைவார்த்தைகள் 37ம் வசனத்தில் அந்த பேசும் வார்த்தை. சாமுவேலை தொட்ட வார்த்தை “ஏனெனில் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்ற புனித வாக்கு, தூய வார்த்தை.

இறைவா! பாலகா! இந்த 2018ம் ஆண்டு மறுபடியும் நீர் உண்மையாகவே மனித அவதாரம் எடுத்து பிறந்துள்ளீர். பாவியான என்னோடு பேசிவிட்டீர். உம்மால் இயலும் பாலகா, சீக்கிரமே என் தனிமையை போக்குவீர். என் போன்ற உள்ளங்களின் தவிப்பினை போக்கி விடுவீர். என் குடும்பத்தோடு இணையப்போகிறேன். சாமுவேலின் உள்ளம் சந்தோசமிகுதியால் களிகூர்ந்தது. தொலைபேசியை நோக்கி கைகளை நீட்டினான். எண்களை அழுத்தான். தொடர்பெடுத்தான். தன் தாயகத்தை நோக்கி மறுமுனையில் அப்பா இனிய பாலன் பிறப்பு வாழ்த்துக்கள். Happy Christmas. ஒன்று சேர வந்தன மனைவியினதும், செல்ல மகளினதும் பாசக்குரல்கள். “உங்களிற்கும் இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்”.... வெளியே இருள் முழுமையாக விலகி ஒளி படர்ந்து எங்கும் வெளிச்சம்!

## அச்சக அறிவித்தல்

**கொழும்பு கத்தோலிக்க அச்சகமானது நத்தார் விடுமுறைக்காக மார்கழி மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி 2018 வரை மூடப்பட்டிருக்கும். மீண்டும் மார்கழி மாதம் 31ஆம் திகதி வழமைப்போல் சேவைகள் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.**

**நன்றி – இயக்குனர்**

## 12 கொழும்பு...

இந்நிகழ்வில் வணக்கத்துக்குரிய எக்ஸ்பரிடிஸ் ஜெயக்கொடி அடிகளார் (தேசிய குருமடம், இலங்கை இராக்கினி, அம்பிட்டி) மற்றும் அருட்தந்தை ப்ரிலீ முத்துக்குடாராய்சி (முன்னால் இயக்குனர்) புனித அலோசியஸ் குருமடம், கொழும்பு - 8. மற்றும் குருக்கள், அருட்சகோதரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# செய்யும் நன்மை திரும்பி வரும்

ஒரு தாய், ஒவ்வொரு நாள் காலையிலும், தனது அன்றைய நாளின் உணவுக்குத் தேவையான சப்பாத்திகளைச் செய்வதோடு, கூடுதலாக ஒரு சப்பாத்தி செய்து, அதை தனது வீட்டு சன்னலில் வைத்து வந்தார். நல்லதொரு வேலை தேடி வேறொரு நகருக்குச் சென்ற தன் மகனுக்காகச் செபித்துக்கொண்டே அதை வைத்தார். நீண்ட நாள்களாகியும் தன் மகன் வரவில்லையே எனவும் கவலைப்பட்டார், அந்த தாய். அந்த வீட்டுப் பக்கமாகச் செல்லும், கூன்விழுந்த வயதான, கைவிடப்பட்ட ஏழை முதியவர் ஒருவர், அந்தச் சப்பாத்தியை தினமும் எடுத்துச் சென்று சாப்பிட்டார். அப்படி எடுத்துச் செல்கையில் ஒவ்வொரு நாளும், **நீ செய்யும் தீமை உன்னிடமே தங்கியிருக்கும். ஆனால் நீ செய்யும் நன்மை உன்னிடமே திரும்பி வரும்** என்ற சொற்களை, முணுமுணுத்துக்கொண்டே சென்றார். இதை கவனித்து வந்த அந்த தாய், என்னது, இந்தக் கிழவன் நன்றி என ஒருநாள்கூட சொல்ல மாட்டேங்கிறார், நீ செய்யும் தீமை உன்னிடமே தங்கியிருக்கும். ஆனால் நீ செய்யும் நன்மை உன்னிடமே திரும்பி வரும் என, போகிற போக்கில் சொல்லிச் செல்கிறாரே என எரிச்சல்பட்டார். இதற்கு அர்த்தம் புரியவில்லையே எனவும், அந்த தாய் கவலைப்பட்டார். அதனால், அந்த முதியவரை எப்படியாவது வீட்டுப் பக்கம் வரவிடாமல் செய்ய வேண்டும் என விரும்பினார். ஒருநாள் அவருக்கு வைக்கும் சப்பாத்தியில் நஞ்சைக் கலக்கத் திட்டமிட்டார். ஆனால் அன்று அவர், நஞ்சை ஊற்றிக்கொண்டிருக்கும்போதே, அந்த முதியவர் சொன்ன சொற்கள் எதிரொலித்தன. அந்த தாய்க்கும் மனது சரியில்லை. ஆதலால் அந்த சப்பாத்தியைத் தூக்கி எறிந்துவிட்டு, வேறு ஒரு சப்பாத்தி செய்து, வழக்கம்போல் தன் மகனுக்காகச் செபித்துக்கொண்டே சன்னலில் வைத்தார். அன்று மாலை யாரோ வீட்டுக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. திறந்து பார்த்தபோது அவரது மகனைக் கண்டு வியப்படைந்தார். மகன் எலும்பும் தோலுமாய், கிழிந்த ஆடைகளுடன், பசி தாங்க முடியாமல் நின்றுகொண்டிருந்தார். மகன் சொன்னார்,

அம்மா, நான் இங்கு நிற்பது ஒரு புதுமைதான். நம் வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்தவேளை, ஒரு மைல் தூரத்திற்கு அப்பால், நான் பசியால் நிலைகுலைந்து இறக்கும் நிலையில் இருந்தேன். அப்போது அவ்வழியாய் வந்த கூன்விழுந்த முதியவர் ஒருவரிடம், ஒரு சிறிய ரொட்டித்துண்டுதான் கேட்டேன். ஆனால் அவரோ தன்னிடமிருந்த ஒரு சப்பாத்தியைக் கொடுத்தார். என்னிடம் அதைக் கொடுக்கும்போது அந்த முதியவர், இந்தச் சப்பாத்தியைச் சாப்பிட்டுத்தான் நான் ஒவ்வொரு நாளும் உயிர் வாழ்கிறேன், ஆனால் இன்று என்னைவிட உனக்குத்தான் இது அதிகம் தேவைப்படுகின்றது, இந்தா எனச் சொல்லிக் கொடுத்தார். இதைக் கேட்டவுடன் அந்த தாய், மனப்பாரம் தாங்க இயலாமல், சுவரில் தலையைச் சாய்த்துக்கொண்டார். அன்று காலை நஞ்சைக் கலந்து தயாரித்த அந்த சப்பாத்தியை நினைத்துப் பார்த்தார். அதை எனது மகன் சாப்பிட்டிருந்தால் இந்நேரம் அவன் இறந்திருப்பான் என்று நினைத்து மனம் பதைத்தார். அதேநேரம், **நீ செய்யும் தீமை உன்னிடமே தங்கியிருக்கும். ஆனால் நீ செய்யும் நன்மை உன்னிடமே திரும்பி வரும்** என்ற அந்த முதியவரின் கூற்றின் பொருளைப் புரிந்துகொண்டார் அந்த தாய். எனவே நன்மை செய்ய வேண்டும், நன்மை செய்வதை ஒருபோதும் நிறுத்தக் கூடாது. நன்மை செய்யும்வேளையில் அது பாராட்டப்படாமல் இருந்தாலும்கூட, நன்மை செய்வதை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது. கிறிஸ்மஸ் பண்டிகை கால தயாரிப்பிலும், 2018ம் ஆண்டின் இறுதி நாள்களிலும் இருக்கின்றோம். இவ்வேளையில் கூன்விழுந்த அந்த வயதான ஏழை முதியவரின் அருள்வாக்கு நம் சிந்தனைக்கு அருமருந்தாக உள்ளது.



ஆக்கம்: பெர்னத்

ஒவ்வொரு கருவும்
இறை மனித உறவை புதுப்பிக்கும்
ஒரு கண்ணாடி
இவர்களை வாழ விடுங்கள்.
இவர்கள் கடவுளின் கொடைகள்
என்பதை மறந்து
விடாதீர்கள்.



# மாசில்லா குழந்தைகள் தினம்

23 மார்கழி, 2018
XVII

இவ்விழா முதல் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடப்படுகிறது. இவர்கள் வேதசாட்சிகள் என புனித எரோனிமுஸ், புனித அகஸ்தின் சொல்லுகிறார்கள். இக்குழந்தைகள் உலகம், உடல், பசாசு இவற்றால் ஏற்படும் தீமைகளை அறியாமலேயே விண்ணகப் பிறப்பை அடைந்தவர்கள்.

ஏரோது அரசனால் மாசற்ற குழந்தைகள் கொல்லப்பட்டதை நற்செய்தி நூலில் நாம் பார்க்கிறோம். ஏறக்குறைய நாற்பது ஆண் குழந்தைகள் கொல்லப்பட்டிருப்பார்களென சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அவர்கள் இறந்து இயேசு நம் அரசர் என சாட்சி பகர்கிறார்கள். ஏனென்றால் இயேசு யூதர்களின் அரசன், என்றபடியால் ஏரோது மன்னன் அவரைக் கொல்ல தேடினான். கொல்லப்பட்ட குழந்தைகள் அரசரது புகழை வாயினால் அல்ல தங்கள் சாவினால் பாடி புகழ்ந்தனர்.

"ராமாவிலே கூக்குரல் கேட்டது. பேரழுகையும், ஒப்பாரியுமாய் இருந்தது. ராக்கேல் தன் குழந்தைகளுக்காக அழுதுக் கொண்டு குழந்தைகள் இல்லாததால் ஆறுதல் பெறவில்லை." என்ற ராக்கேல், பெத்லகேமுக்கு அருகில் இருந்த தன் கல்லறையிலிருந்து புறப்பட்டு வெளிவந்து தன்னிடமிருந்து பறிக்கப்பட இருக்கும், தன் மக்களை நினைத்து அழுது புலம்புவதாக எரேமியாஸ் சித்தரிக்கின்றார். ஏரோதுவின் ஆட்சியில்



கொல்லப்பட்ட குழந்தைகளின் தாய்மார் ராக்கேலைப் போலஅழுததாக புனித மத்தேயு சொல்லுகிறார்.

இன்று நாம் வாழும் சமுதாயத்திலே, நாட்டிலே ஏன் உலகனைத்திலும் கூட பல நூற்றுக்கணக்கான மாசற்ற குழந்தைகள் கொல்லப்படுகின்றார்கள். நாங்கள் எந்த குற்றம் செய்தோம், ஏன் எங்களுக்கு இந்த நிலை என்று கூட தெரியாத, புரிந்துக் கொள்ள முடியாத வயதிலே யாதும் அறியாத பச்சிளங் குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள்.

**– கருவிலே கொலை**
**– கடத்தப்பட்டு கொலை**
**– பலாத்கார கொலை**
**– கற்பழிக்கப்பட்டு கொலை**

என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

நமது குடும்பங்களிலே நமக்கு தெரியாமலே, எத்தனை மாசற்ற குழந்தைகளை கொண்டிருக்கிறோம். நமக்கு இப்போது குழந்தைகள் தேவையில்லை என்று முடிவெடுத்து கருவிலே கொல்லப்படுகின்ற குழந்தைகள் எத்தனை? எனக்கு வசதி குறைவு, எனக்கு வேலை வாய்ப்பு இல்லை, எனக்கு சொந்த வீடு இல்லை இப்போது எனக்கு குழந்தை வேண்டாம் என்று கூறும் வர்க்கம் ஒருபக்கம்.

எனக்கு வயது இருக்கு பிறகு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளலாம், இப்போது தானே திருமணம் முடித்தேன், காலம் தாழ்த்தி பிள்ளையை பெற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கும் வர்க்கம், இன்னொரு பக்கம் அதனால் அவர்கள் கருவுற்றாலும் அதை கருவறையிலேயே கொன்று சமாதி கட்டிவிடுகிறார்கள்.

ஒவ்வொரு கருவும் இறை மனித உறவை புதுப்பிக்கும் ஒரு கண்ணாடி என்பதை மறந்து விடாதீர்கள். இவர்களை வாழ விடுங்கள். இவர்கள் கடவுளின் கொடைகள். எமது திருச்சபையும் இதையே நாளும் வழியுறுத்திக் கூறுகிறது. கருக்கொலை வேண்டாம் என்று அது ஒரு பெரிய பாவம் என்று கூறுகிறது.

இன்று மாசில்லா குழந்தைகளின் விழாவைக் கொண்டாடும் நாம் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் நமது விசுவாசத்தையும், அன்பையும், அரவணைப்பையும், நல்லொழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் சொல்லித் தருவோம். எதிர்காலங்கள் குழந்தைகளின் கையில்தான் இருக்கிறது என்பதை உணர்த்துவோம். நாம் பொறுமை, வாய்மை, பயபக்தி, தர்மம், இறைவனிடம் நம்பிக்கையுடன் வேண்டுதல் போன்றவைகளை கடைப்பிடிக்கும்போது, அவர்களுக்கு நாம் சொல்லித் தர தேவையில்லை. நம்மை பாத்துக் கற்றுக்கொள்வார்கள் குழந்தைகள்.

எனவே, அன்பு சகோதரனே, சகோதரியே, சவால் நிறைந்த உலகில் பணத்திற்கு முதல் இடம் தராமல், பாசத்திற்கு முதன்மையான இடத்தைக் கொடுத்து உங்கள் குழந்தைகளுக்கு நேரத்தைச் செலவிடும்போது, அவர்களும் நல்ல குழந்தைகளாக வளர வாய்ப்புகள் அதிகம். ஆகவே அவர்களை பாசத்துடன் வளர்க்க முயற்சி செய்வோம்.



# கிறிஸ்மஸ் தாத்தா

நாடெங்கும் கிறிஸ்மஸ் பேரின்பப் பெரு விழாவை மிக மகிழ்வுடன் கொண்டாடும் மார்கழி 25ம் திகதி உலகப் பிரசித்திப் பெற்ற நாள்! இவ்விழாவில் வலம் வரும் கிறிஸ்மஸ் தாத்தாக்கள் குதூகல பண்டிகைக் கொண்டாட்டத்துடன், மற்றவர்களை மகிழ்விக்கும் மனிதநேய உணர்வுகளையும் நமக்குள் நிறைக்கின்றனர். பேரப்பிள்ளைகளை மகிழ்விக்கின்ற தாத்தா உறவு உன்னதமானது. இதிலும் பை நிறைய பொம்மைகளும், பரிசுகளுமாக இனிப்புகளுடன் வலம் வந்து சிறார்களை மகிழ்விக்கின்ற கிறிஸ்மஸ் தாத்தா அனைவரது



உணர்விலும் இன்னும் அதிக உவகையில் நிறைகின்றார். இந்தத் தாத்தா கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் அடுத்தவர் அறியாமலேயே உதவிகள் செய்யும் உணர்வை அனைவர் மனதிலும் நிரப்பிவிடுகிறார்.

'ஸிண்டர் கிளாஸ்' என்னும் டச்சு வார்த்தையின் அமெரிக்க வடிவம் 'சாண்டாகிளாஸ்' ஆகி, இந்தக் கிறிஸ்மஸ் தாத்தாவை 'சாண்டா' என்கிறோம். இவர்தான் புனித நிக்கோலஸ். இவர் துருக்கி நாட்டில் மிரா நகரில் 4ஆம் நூற்றாண்டில் கிறஸ்தவ ஆயராகி வாழ்ந்தவர். வறுமையால் வாரம் இருமுறை மட்டும் உணவு கிடைக்க, இச்சிறு வயது வறுமை வாழ்வினால் இவருக்குள் பிறரை மகிழ்விக்கும் மனப்பசி பெருகியது. வறுமையின் வீச்சால், ஏழைகள் துயரத்தை நேரில் கண்ட அனுபவத்தால் இவர் மனிதநேயவாதியாக மாறிப்போனார்.

துருக்கி மிரா நகரத்து ஆயர் இறந்ததால் புதிய ஆயர் தேர்வு செய்யும் கூட்டம் நடந்தது. ஆலயத்திற்குள் நிக்கோலஸ் பெயரில் முதலில் நுழைபவரே அடுத்த ஆயராக அறிவிக்கப்பட வேண்டுமென இரவில் தான் காட்சி கண்டதாக ஒருவர் தெரிவிக்க, மறுநாள் எதேச்சையாக இந்த நிக்கோலஸ் ஆலயத்திற்குள் நுழைய, இவரே ஆயர் ஆக்கப்பட்டார்.

மிரா நகரமே கி.பி 311 இல் பஞ்சத்தில் தவிக்க, தங்கள் ஊர் துறைமுகம் வழியாக அலெக்சாந்திரியா சென்று உணவு கப்பலில் ஊர் மக்களுக்கு நிக்கோலஸ் உணவு கேட்டார். தாங்கள் எடுத்துக் கொடுத்த அளவு குறைந்தால் அலெக்சாந்திரியா மன்னனின் கோபத்திற்கு ஆளாவோம் என பணியாளர்கள் மறுத்தனர். "கடவுளின் பெயரால் சொல்கிறேன், யாருக்கும் குறைவுபடாது" எனக்கூறி அவர்களிடம் தானிய மூட்டைகளை வாங்கி ஊர் முழுக்க விநியோகித்தார். அலெக்சாந்திரியாவை கப்பல் அடைந்தபோது காலியான உணவுக் கிடங்கு நிரம்பி வழிந்ததாக மரபுவழிச் செய்தி கூறுகிறது.

எளியோருக்கு அவர்கள் அறியாமலேயே உதவும் உயர்ந்த எண்ணம் கொண்ட சமர்த்தரான இவர், தேவை தெரிந்து உரியவற்றை ஏழை வீடுகளில் இரவில் வைத்துவிட்டு வந்துவிடுவார்.

'கிறிஸ்மஸ் தாத்தா' என்றால் எல்லார் மனத்திலும் நினைவுக்கு வருபவர் இந்தப் புனித நிக்கோலாஸ் தான்.

இங்கிலாந்தைச் சேர்ந்த கார்ஸ்லே என்பவர் முதல் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை கி.பி. 1843 இல் தன் நண்பர் ஹென்றி ஹோலவுக்கு அனுப்பினார்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் விழாவின் முக்கிய நிகழ்வே பரிசுகள் தரும் சாண்டாகிளாஸ்தான். கிறிஸ்மஸ் தாத்தாவும் இவர்தான்!

சிவப்பு அங்கி, வெண் தாடி, நீண்ட தொப்பி, பரிசுப் பை என சாண்டாகிளாஸ் தாத்தாவுக்கு உருவம் கொடுத்தது கோக் நிறுவனமாகும். 1931ஆம் ஆண்டு அமெரிக்காவின் மிக்ஸ்கன் மாகாணத்தைச் சேர்ந்த ஓவியரான ஹாடோன் சண்ப்பிளேன்தான் சாண்டா உருவத்தை உருவாக்கியவர்.

# நத்தார் சிறப்பிதழ்



23 மார்கழி, 2018 XVIII

"இயேசு, மரி, சூசை என்ற உன்னதமான குடும்பம், ஒவ்வொரு விசுவாசிக்கும், குறிப்பாக குடும்பங்களுக்கான நிஜமான, போலியற்ற நற்செய்தியின் பாடசாலையாக இருக்கின்றது"

# திருக்குடும்பம்



# 'அனைத்து குடும்பங்களுக்குமான முன்மாதிரிகை'

'The passion of Christ" (கிறிஸ்துவின் பாடுகள் பற்றிய) ஆங்கில திரைப்படத்தில் ஒரு அழகான காட்சி அனைவர் மனதையும் உருகச் செய்கிறது. இயேசு தன் கரங்களில் தண்ணீரை எடுத்து தன் தாயின் முகத்தில் வீச செய்து தன் தாயை கட்டியணைத்து முத்தம் கொடுக்கின்றார். இது ஒரு வகையான உணர்வாக இருந்தாலும், இந்த காட்சி வெளிப்படுத்துவது கிறிஸ்து முழுமையான மனிதராக வாழ்ந்தார் என்று. எனவே இந்த நிலையில் கடவுள் நம் மகனை குடும்பத்தில் பிறக்கச் செய்து ஒரு குடும்ப உணர்வினை ஏற்படுத்தி முன்மாதிரியான வாழ்வு வாழ அழைக்கின்றார்.

"நாசரேத்தூர் குடும்பம்" என்னதொரு அழகான குடும்பம். இது ஒரு வகையான பாடசாலை, இயேசுவின் வாழ்வு, அவருடைய நற்செய்தி பணியை பற்றி அறிவதற்கான முதன்மையான இடமாக இருக்கின்றது. அதனால் தான் திருத்தந்தை பிரான்சிஸ் பின்வருமாறு கூறுகின்றார்.

"இயேசு, மரி, சூசை என்ற உன்னதமான குடும்பம் ஒவ்வொரு விசுவாசிக்கும், குறிப்பாக குடும்பங்களுக்கான நிஜமான, போலியற்ற நற்செய்தியின் பாடசாலையாக இருக்கிறன்றது" எனவே இந்த உன்னதமான குடும்பத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய 3 பண்புகள் இருக்கின்றன.

1) நாம் கற்றுக்கொள்ளும் முதலாவது பண்பு தான்

**"குடும்பம் அமைதியை கற்றுத்தரும் இடம்"**

இக்குடும்பம் அமைதியை ஏற்படுத்தும் நடுநிலையமாக இருக்கின்றது. அத்தோடு ஆழமான ஞானத்தை தரும் இடமாக இருக்கின்றது. இங்கிருந்து அமைதியின் தியானம், தனியாள் ஆன்மீக வாழ்வு, கடவுள் மட்டும் அறிந்த அமைதியான செப வாழ்வு இருப்பதைக் காணலாம். அமைதியில் இம்மூவரும் எவ்வாறு கடவுளுடன் இணைந்து வாழ்ந்தார்கள் என்பதை நாம் காண்கின்றோம்.

2) இரண்டாவது பண்புதான் இக்குடும்பம்

**"குடும்ப வாழ்வு பற்றிய கருத்துக்கள் தரும் இடம்"**

நசரேத்தூர் குடும்பம், இன்றைய சமூகத்தில் குடும்பங்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை கற்றுத்தருகிறது. குடும்பத்தில் தூய்மையான வாழ்வு, அர்ப்பணம், பொறுப்பு, விட்டுக் கொடுக்கும் நிலை மற்றும் ஏனைய நற்பண்புகளைக் கொண்டு நிறைந்து வாழ்ந்த இக்குடும்பம், உண்மையில் ஓர் குட்டித் திருச்சபையே. அதேபோல் குட்டித் திருச்சபையாக இணையும் குடும்பங்களும் இக்குடும்பத்தைப் முன்மாதிரிகையாகக் கொண்டு வாழ வேண்டும்.

3) குடும்பத்தில் நாம் கற்றுக் கொள்ளும் மூன்றாவது பண்புதான்

**"தொழிலின் மேன்மையும், தொழில் தொடர்பான ஒழுங்கினையும் கற்றுத்தரும் இடம்"**

தொழிலுக்கென்று தனித்துவம் உண்டு. இங்கு யோசேப்பு, இயேசுவுக்கு எப்படி தொழில் கற்றுக் கொடுக்கிறார் என்பதை காண்கின்றோம். இயேசுவும் தன் தந்தையின் தொழிலில் இணைந்து முழுமையான உதவியை அவருக்கு அளித்தார். அத்தோடு இது முடிவடையவில்லை. மாறாக இந்த தொழிலின் பெறுமதியும் அதற்கான சுயாதீனத்தன்மையும் எப்பிடி இருக்க வேண்டும் என்பதை எமக்கு கற்றுத் தருகின்றது.

இம்மூன்று படிப்பினைகளும் குடும்பத்திற்கான கடவுளின் எல்லையில்லா அன்பினை எடுத்துக்காட்டுகிறது. நம்மாண்டவர் தம் மகனை இக்குடும்பத்தில் பிறக்கச் செய்து, அதில் வாழப் பண்ணுகிறார். அதன் பலனாக குடும்பவாழ்வு என்பது பரிசுத்த பரம திருத்துவத்திற்குள் இணைக்கப்படுகின்றது. எனவே திருக்குடும்பத்தின் விழுமியம் ஒவ்வொரு குடும்பத்தையும் இறைவனின் மறையுண்மை வாழ்வுக்குள் பங்காளியாக வாழ அழைப்பு விடுக்கின்றது.


எனவே இன்றைய குடும்பங்களும் தெருக்குடும்பங்களாக அல்லாமல் திருக்குடும்பங்களாக வாழும் போது குடும்ப கிறிஸ்தவ வாழ்வு பரிசுத்த பரம திரித்துவத்திற்குள் இணைக்கப்படுகின்றது. திருக்குடும்பம் போல் வாழ்கின்ற போது, அதன் பண்புகளை எமது வாழ்வாக்கும்போது நாமும் இயேசு, மரி, சூசை என்ற உன்னத குடும்பத்தின் விம்பங்களாக மாறுவோம். எனவே நாம் கொண்டாடும் இத்திருக்குடும்ப விழா அர்த்தமான விழாவாக மாற வேண்டும் என்றால், இக்குடும்பத்தில் எம் குடும்பத்தையும் இணைத்து பரிசுத்த பரம திரித்துவ மறையுண்மையில் நாமும் இணைய வேண்டும். இணைவோம், திருக்குடும்பமாக மாறுவோம்.

**நாசரேத்தூர் குடும்பம் எம் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதாக.**

**சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ**
**தேசிய குருமடம் – கண்டி**

நல்லெண்ணங்கள் நம்மை ஆளட்டும்

## நமது குடும்பங்கள் திருக் குடும்பங்களாகத் திகழ குடும்பத்திலுள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பத்துக்கட்டளைகள்



1) புனித யோசேப்பைப் போல கணவன் தன் துணைவி மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும் (மத். 1:24)

2) அன்னை மரியாளைப் போன்று மனைவி தன் கணவனுக்குப் பணிந்து நடக்க வேண்டும். (மத். 2:14, 19-23, கொலோ. 3:18)

3) கணவன் எந்த சூழ்நிலையிலும், வீணான பேச்சுக்கு இடம் கொடாமல் புனித யோசேப்பைப் போன்று குடும்பத்தை மேம்படுத்தும், நற்சிந்தனைக்கும், நற்செயலுக்கும், முதலிடம் கொடுக்க வேண்டும்.

4) ஏழு முறை மட்டுமே பேசிய அன்னை மரியாவைப் போன்று மனைவி குறைவாக பேசி, குடும்பத்திற்காக அதிகமாகப் பாடுபட முன் வரவேண்டும். (லூக். 1:34, 1:38, 1:39-45, 46-55)

5) குழந்தைகள் இயேசுவைப் போன்று பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். (லூக். 2:51-52. கொலோ. 3:20)

6) குழந்தைகள் தங்கள் பெற்றோருக்குப் பணியாளர்களாக விளங்க வேண்டும். (சீ.ஞா. 3:7)

7) பெற்றோர்கள் பிள்ளைகளின் குறைகளை மட்டும், சுட்டிக் காட்டாமல், அவர்களது நிறைகளையும் சுட்டிக் காட்டி, அவர்களுக்கு உற்சாகமூட்ட வேண்டும். (கொலோ. 3:21)

8) குடும்பத்திலுள்ள எல்லோரும், தங்களை மனத்தாழ்மை, கனிவு, பொறுமை, போன்ற நல்லெண்ணங்களால் அலங்கரித்துக்கொள்ள வேண்டும். (கொலோ. 3:12)

9) குடும்பத்திலுள்ளவர்கள் ஒருவர் மற்றொருவரின் குற்றங்களை மனமுவர்ந்து மன்னித்து மறந்துவிட வேண்டும்.

10) அன்புடனும், பொறுமையுடனும், அமைதியுடனும், குடும்பத்திலுள்ள எல்லாரும் வாழ முன் வர வேண்டும். (கொலோ. 3:14-15)



# இயேசுவிடமிருந்து ஓர் கடிதம்

எனதருமை குழந்தாய்!

என்னுடைய பிறந்தநாள் நெருங்கி வருவதை நீர் அறிந்திருப்பீர். ஒவ்வொரு வருடமும் எனது பிறந்தநாளைக் கொண்டாடுவதைப் போல், இவ்வருடமும் அதை அவ்வாறே வெகு விமரிசையாக கொண்டாடுவீர்கள் என நான் நினைக்கின்றேன்.

இக்காலகட்டத்தில் பெரும் பாலானோர் கடைகளுக்குச் சென்று பரிசுப் பொருட்களை ஆர்வமாக வாங்கியும், தொலைக்காட்சிகளில் விளம்பரங்களிலுமே ஆர்வம் காட்டுவதோடு, உலகெங்குமுள்ள மக்கள் எனது பிறந்தநாளைக் கொண்டாடுவது நீர் அறிந்த விடயமே. தொடக்கத்தில் வாழ்ந்த மக்கள், நான் அவர்களுக்காக செய்தவைகளுக்கு நன்றி கூறுவதற்கு முன்வந்தனர். ஆனால் இத்தருணத்தில் உள்ள எவரும் இக் கொண்டாட்டங்களுக்கான உண்மையான காரணத்தைக் கண்டுகொள்ளவதேயில்லை. குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள் ஒன்றுசேர்ந்து கழியாட்டங்களில் ஈடுபடுகின்றனர். ஆனால், இதற்கான அர்த்தம் அவர்களுக்கு தெரியவில்லை. எனது பெயரில் கடந்த வருடமும் இத்திருவிழாவை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடியமையை நான் அறிவேன். பல வகையான உணவு வகைகளாலும் அலங்காரங்களாலும், அழகாக பொதிசெய்யப்பட்ட பரிசுப் பொருட்களாலும் நிரம்பி இத்திருவிழா கலைக்கட்டியது.

**ஆனால் உமக்கு ஓர் விடயம் தெரியுமா? நான் அவ்விருந்திற்கு அழைக்கப்படவில்லை. நானே இவ்விழாவின் பிரதான சிறப்பு விருந்தினர். எனக்கு அழைப்பு விடுவதற்கு அனைவரும் மறந்துவிட்டனர்.**

இவ்விழா எனக்காகவே கொண்டாடப்படினும் இந்நாளின் போது, நான் வெளியில் தள்ளப்படுகின்றேன். என் முகத்திற்கு முன்பாகவே கதவை மூடுகின்றனர். எனினும் எனக்குத் தேவைப்படுவது, அவர்களோடு ஒன்றாக அம்மேசையில் அமர்ந்திருந்து பகிர்வதற்கே ஆகும்.

அவர்கள் என்னை ஆச்சரியப்பட வைக்கவில்லை. ஏனெனில் இவ்வாறு கதவை அடைப்பது, அண்மைக் காலங்களிலிருந்து எனக்குப் பழகிப்போன விடயமாக அமைந்தமையே உண்மை. இது வரைக்கும் இவ்விருந்திற்கு நான் அழைக்கப்படவில்லை. எச்சத்தங்களும் இன்றி அமைதியாக இவ் வைபவத்துள் நுழைவேன் என நான் முடிவெடுத்துள்ளேன். நான் போய் ஒரு பக்கத்தில் அமர்ந்திருப்பேன்.

சிவப்பு நிற ஆடையுடனும், வெள்ளை நிற நீண்ட தாடியுடனும், பரிசுகளை சுமந்து கொண்டு வீட்டினுள் நுழையும் "Santa Claus" என பிள்ளைகள் விரைந்து ஓடிக் கொண்டு அழைக்கும் நபரே இந்நாளின் பிரதான விருந்தினராக இருக்கின்றார்.

**நள்ளிரவில் மக்கள் ஒருவரையொருவர் அனைத்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர். நான் எனது கைகளை விரித்த வண்ணம், என்னைக் கட்டித் தழுவி வாழ்த்து சொல்ல யார் வருவார் என எதிர்பார்த்து இருந்தேன். ஆனால் யாருமே வரவில்லை.**

எல்லோரும் பரிசுகளை பரிமாறிக் கொள்வர். அவர்கள் அவற்றை விரித்துப் பார்க்கையில், எனக்கு விரித்துப் பார்க்க ஒரு பரிசும் கையில் இருப்பதில்லை. உங்களுடைய பிறந்த நாளில் மற்றையவர்கள் பரிசுகளை பரிமாறிக் கொள்கையில், உங்களுக்கு ஒருபரிசும் கிடைக்காவிட்டால், எவ்வகையாக நீங்கள் உணர்வீர்கள்?

**இக்கொண்டாட்டத்திற்கு நான் அவசியமில்லை என்பதை நான் உணர்ந்து, அவ்விடத்தை விட்டு அமைதியாக நான் வெளியேறிவிடுவேன்.**

எல்லா வருடங்களிலும் இவ்வாறே நடக்கின்றன. மனிதர்கள் பரிசுப் பொருட்களில் கொண்டாட்டங்களில், உணவு மற்றும் பானங்களில் ஈடுபாடு காட்டுகின்றார்களேயொளிய, என்னை மறந்து விடுகின்றார்கள்.

**இம்முறை நத்தார் திருவிழாவின் போதாவது, என்னை அவர்களது வாழ்வினுள் நுழைய இடமளிக்கவேண்டுமென விரும்புகின்றேன். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நான் இவ்வுலகிற்கு வந்து, என்னுயிரை உனக்காக கொடுத்ததை, சிலுவையில் அறையப்பட்டு உன்னை மீட்டதை, அவ்வுண்மையை நீ நினைவிற் கொள்ள வேண்டுமென நான் ஆசைப்படுகின்றேன். இன்று, நீ அதை முழுமனதுடன் விசுவசிக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.**

உன்னோடு ஒரு விடயத்தை பகிர ஆசைப்படுகின்றேன். எவரும் அவர்களது கொண்டாடத்திற்கு என்னை அழைக்கவில்லை, என்னுடைய சொந்த கொண்டாட்டமொன்று இருக்கின்றது. அது யாருமே எதிர்பார்க்காத வண்ணம் அமைந்த மாபெரும் கண்கவர் திருவிழா. அந்தாளுக்கான ஏற்பாடுகளை செய்துக்-கொண்டிருக்கின்றேன்.



இன்று நான் அதற்கான அழைப்பிதழ்களை அனுப்பிக்கொண்டிருக்கின்றேன். உனக்கும் அழைப்பு விடுக்கின்றேன். நீயும் இதில் பங்கு கொள்ள விரும்பினால், உனக்காக ஓர் பெயரை ஒதுக்கீட்டை செய்வதற்கும், என்னுடைய சிறந்த விருந்தினர் புத்தகத்தில் உன்னுடைய பெயரை தங்க எழுத்துக்களில் பதிப்பதற்குமாக அனுமதியை அறிய விரும்புகின்றேன். விருந்தினர் புத்தகத்தில் பெயர் எழுதப்பெற்ற நபர்களை மட்டுமே நான் விருந்திற்கு அழைப்பேன். என் அழைப்பிற்கு பதில் கூறாதவர்கள் வெளியில் அனுப்பிவைக்கப்படுவார்கள். எனவே, ஆயத்தமாகவும். ஏனெனில் அந்நாள்களில் என்னுடைய திருவிழாவில் நீயும் ஓர் பங்காளியாக இருப்பாய். விரைவில் சந்திப்போம்! நான் உன்னை அன்பு செய்கின்றேன்.!

**இப்படிக்கு,**
**இயேசு**

**ஆக்கம்:**
**செல்வி. எனஸ்டிகா நொயலின்**

# அன்பும் ... நட்பும் ...

"அம்மா, கிறிஸ்மஸிற்கு இன்னும் ஒரு நாள் தான் இருக்கு. எனக்குப் புதுச்சட்டை எடுக்காம இருக்கிறீங்களே? என் நண்பர்கள் எல்லாம் புதுச்சட்டை போட்டுகிட்டு வருவாங்க. நான் மட்டும்..." என்று அழுதான் டேவிட்.

"சரி அழாதே... இன்றைக்கு எப்படியாவது வாங்கித் தர்றேன்" என்று சமாதானம் செய்தாள் அவன் தாய்.

தன் ஒரே மகனுக்காக தான் சேர்த்து வைத்திருந்த பணத்தில் ஒரு புதுச்சட்டை வாங்கித் தந்தாள். டேவிட் அம்மா வாங்கித் தந்த சட்டையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான்.

கிறிஸ்மஸ் குடிலைப் பார்ப்பதற்காக அன்று மாலை கோவிலுக்குச் சென்றான். கோவில் முகப்பில் அவன் வயதுள்ள ஓர் ஏழைப் பையன் தன் அம்மாவிடம் புதுச் சட்டைக்காக அழுது அடம்பிடித்துக் கொண்டிருந்தான்.

இதைப் பார்த்த டேவிட்டுக்கு அந்தச் சிறுவன் மேல் பரிதாபம் தொற்றிக்கொண்டது. "நான் ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தினாய்" என்று இயேசு சொன்ன வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தது.

அழுது கொண்டிருந்த பையனை சைகை காட்டி அழைத்தான். "தம்பி, உனக்குப் புதுச்சட்டைதானே வேணும்? நான் தர்றேன் அழாதே... என்கூட வா..." என்று கூறி தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று தனக்காக அம்மா வாங்கி வைத்திருந்த புதுச்சட்டையையும், சில இனிப்புகளையும் கொடுத்து அனுப்பி வைத்தான். தன் பழைய சட்டையை எடுத்துத் துவைக்க ஆரம்பித்தான். அப்போது கடையிலிருந்து வந்த அவன் தாய் "என்னடா, என்ன செய்றே?" என்று கேட்டாள்.

"அம்மா... அது வந்து..." எப்படிச் சொல்வதென்று தெரியாமல் டேவிட் தடுமாறினான்.

"ஆமா, புதுச்சட்டைதான் இருக்கே, அப்புறம் ஏண்டா இந்தப் பழைய சட்டையைத் துவைக்கிறே?"

"அது... கிறிஸ்மஸ்க்கு போடுறதுக்குத்தாம்மா இந்த சட்டையைத் துவைக்கின்றேன்.

"ஏண்டா ஏன்? அப்போ புதுச்சட்டை?"

"அம்மா, நான் கோயில்ல ஒரு பையனைப் பார்த்தேன். அவன் நம்மைவிட ரொம்ப ஏழைம்மா. புதுச் சட்டைக்காக அவன் அழுத அழுகையைப் பார்க்க ரொம்ப கஷ்டமாயிருந்தது. அதனால என் சட்டையை அவனுக்குக் கொடுத்திட்டேன்".

"அம்மா... ஏழை ஒருவனுக்குச் செய்த உதவியெல்லாம் எனக்கே செய்தாய் என்று இயேசு சொல்லியிருக்காரு இல்லையா... அதான்..."

"உனக்கு இதெல்லாம் செய்ய எப்படிடா மனசு வந்தது?"

"நம்மைவிட ஓர் ஏழைப் பையனுக்கு நம் உணவையோ, உடையையோ பகிர்ந்து கொள்ளும்போது அதுதான் உண்மையான கிறிஸ்மஸ்! ஏனெனில் இயேசு தம்மையே நமக்குக் கொடுத்து நம்மை வாழ வைப்பதற்காகத்தான் அவர் இங்கு வந்து பிறந்தார்னு எங்க மறைக் கல்வி வகுப்பு டீச்சர் சொன்னாங்கம்மா..."

மகன் சொன்னதைக் கேட்ட தாய்க்கு பெருமையாக இருந்தது. தன் மகனின் இரக்க குணத்தை எண்ணி வியப்படைந்தாள். பெறுவதை விட தருவதே இன்பம் என்ற மகனின் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தாள். அதேவேளையில் டேவிட்டின் குடும்ப நலத்திற்காக இறைவனை வேண்டிக் கொண்டிருந்தான் அந்த ஏழைச் சிறுவன்!



நத்தார் சிறப்பிதழ்



# ஆண்டின் இறுதி நாளன்று இயேசுவோடு



## 2018 - மார்கழி 31



**2018ஆம் ஆண்டு இறுதி நாளில் இறைவனுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம் பிறக்க இருக்கும் 2019ம் ஆண்டு எப்படி இருக்குமோ? என்னென்ன செய்திகளைக் கொண்டு வருமோ? நம் வாழ்வு இந்த ஆண்டில் எப்படி அமையுமோ? என்று பல எதிர்பார்ப்புக்களுடனும், பிறக்கின்ற ஆண்டில் நாம் நம் தனிப்பட்ட வாழ்வில் நான் இப்படி வாழ்வேன், அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று பல தீர்மானங்களோடு புதிய ஆண்டை எதிர்பார்த்து இருக்கின்றோம்.**

### நினைத்துப் பார்ப்போம்.

- ✤ இந்த ஆண்டில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும்,
- ✤ இந்த ஆண்டில் நாம் சந்தித்த அனைத்து நபர்களையும்,
- ✤ இந்த ஆண்டில் அனுபவித்த அனைத்து அருள் வரங்களையும்
- ✤ இந்த ஆண்டில் நாம் அடைந்த அனைத்து வளர்ச்சிகளையும்
- ✤ இந்த ஆண்டில் நாம் அடைந்த இழப்புக்களையும்
- ✤ இந்த ஆண்டில் நாம் அனுபவித்த அனைத்து துன்பங்களையும்

தொடர்ந்து இறைப்பிரசன்னத்தில் அனைத்து அனுபவங்களையும் நினைத்துப் பார்ப்போம். அனைத்திற்காகவும் நன்றி கூறுவோம்.

### ‘பழையன கழிந்தன, புதியன புகுந்தன’ (2கொரி 5:17)

“முன்பு நடந்தவற்றை மறந்து விடுங்கள் முற்கால நிகழ்ச்சிப்பற்றிச் சிந்திக்காதீர்கள். “இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றிவிட்டது” (எசா 43:18-19) என்று இறைவாக்கினர் எசாயா கூறுவதைப் போல் நமக்கு இந்த ஆண்டு நடந்த அனைத்து கசப்பான அனுபவங்களிலிருந்தும், நாம் விடுபட இறைச்சக்தியை வேண்டுவோம்.

**எண்ணிய முடிதல் வேண்டும்,**
**நல்லவை எண்ணல் வேண்டும்**
**மிண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும்**

என்ற பாரதியின் வரிகளுக்குளே, நல்லெண்ணத்தோடு திடமான மன உறுதிகொண்டு புது ஆண்டுக்குள் புது அருள் வேண்டுவோம்.

### புலர இருக்கும் இப்புதிய ஆண்டில் 2019

- ✤ களைத்த மனத்திலிருந்து புறப்பட்டு எழுச்சியூட்டும் கனவுகள் புதிதாகக் கண்டிட
- ✤ புதிய தொடக்கம் காண
- ✤ புதிய வழிகளை துணிவுடன் அமைக்க
- ✤ பகை மறந்து மன்னித்து வாழ
- ✤ இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ

என்று சின்ன சின்ன கிறிஸ்தவ விழுமியங்களை செய்யத் தொடங்குவோமாக.

**இதற்காக தன்னையே தியாகம் செய்து அன்பை உலகமெங்கும் பரப்பிட தொடங்குவோமாக. இயேசுவோடு பயணிப்போம்.**

# மனித இழையில் ஒரு புனித விளக்கு

காலம் பூமியின் கரைகளில்
பூக்கோலம் போட்டுக் கொண்டிருந்தது

இரவும் பகலும் சலங்கைகளைக் கட்டுவதும்
கழற்றுவதுமாக காலத்திரையை இழுத்தும்,
போர்த்தியும், இடம்பெயர்ந்து கொண்டிருந்தது.

செவ்வந்தி நிலவு செந்தூரம்
சிந்துகின்ற நிசப்தமாக
ஆலாபனையில் நிலவிக் கொண்டிருந்தது.

நிலவைப்போல் நாமும் நடந்தால்
ஒருவரையொருவர் இடறிக் கொள்வோமென்று
நட்சத்திர நங்கைகள் நின்ற இடத்திலேயே
நிதானமாகக் கண்சிமிட்டிக் கொண்டிருந்த
பின்னிரவுப் பொழுது அது....

பூமி கடுங்குளிரில் கறுப்புக் கம்பளத்தைப் போர்த்தி
கால் நீட்டிப் புரண்டு கொண்டிருந்தது.

பனிமூட்டம் இரவை நனைத்து இறுக்கிக்
கொண்டிருக்க...

பகலெல்லாம் அசைபோட்டுக் கிடந்த ஆடுகள்
இரவெல்லாம் இருட்டின் இசைகேட்டு,
அடங்கிக் கிடந்தன.

கிடைகளுக்கிடையே இடையர்களும்,
முடங்கி கிடந்தனர்.

சாமக் காவல் - இடையர்களின் இமைகளை
உறங்கவிடாமல் பாதுகாத்தன.

பெத்லகேம் ஊருக்கப்பால்
கவிந்த இருட்டும், கதைத்த காற்றும்
பனியில் நனைந்து பெருமூச்சு விட்டுக்
கொண்டிருந்தன.

பேறுகாலமாய் நின்று பேதலித்த மாமரியாவும்,
அவர் தம் அன்புத் துணைவர் யோசேப்பும்
தக்க இடமின்றித் ஊருக்கு அப்பால் உதறிக் கிடந்த
மாடடைக் குடிலில் மையமாகின்றனர்.

பூமி ஒரு புனிதமான பிறப்பின்
பரபரப்பை உணர்ந்து
ஆறிறைத் தொழுவில்
பூவிதை ஒன்று பூக்கப் போவதைப் புலர்த்தியது.

வானவர் தோன்றி வாழ்த்து மழை தூவ,
உன்னத கீதமாய்,
உறைந்த பனி உருக, மாதாவின்
மணி வயிற்றுச் சீதனம், புனித மிக்க,
மனிதமாய் பூமிக்கு வந்தது.

மாதாவின் இமை வேலிகளில்
ஈரம் இடம்கேட்டு நிற்க,
அவரது மகரந்த இழையில்
ஒரு மகர விளக்கு
வெளிச்சத்தோடு வெளிவந்தது.

மண்ணும், விண்ணும் மகிழ்ச்சியில்
புல்லரித்தன - இறைமகன் இயேசு பிறந்தார்.
அதுவரை மின்மினிப் பூச்சிகளின் சின்ன
வெளிச்சத்தில் முகம் பார்த்துக் கொண்ட தொழுவம்
விளக்காக வந்து
ஒரு வெளிச்சம் பிறந்திருப்பதைப் பார்த்துத்
தொழுதது.

துணி இல்லாத துயரம் போக்க,
பாலன் இயேசுவை வைக்கோல் பரப்பி, பத்திரமாய்
வைத்தனர். யோசேப்பும் மரியாவும்

அப்போது வானதூதர்கள் அடர்ந்த இரவிலும்
படர்ந்த பனியிலும் கிடைகளைக் காத்த
இடையர்களுக்குத் தோன்றி, ‘உள்ளத்தில்
கடவுளுக்கு மகிமையும், உலகில் நல்ல மனம்
கொண்டோருக்கு அமைதியும் ஆகுக!

இனிக்கும் ஒரு செய்தி - இனிய
புகழ் எய்தி பிறந்தார் மீட்பர்
பங்கமில்லாப் பாலகனாய்
தரணியில் பிறந்துள்ளார்
தங்க நிலந்தமாக

“மகளே சீயோன்! மகிழ்ச்சியால் ஆர்ப்பரி!
இஸ்ரயேலே ஆரவாரம் செய்
மகளே எருசலேம்!
உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி”
(செப் 3:14)

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

அன்பு வாசக நேயர்களே!

## எமது இதயம் நிறைந்த
## இனிய நத்தார்
## புத்தாண்டு
## வாழ்த்துக்கள்!

கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க அச்சகத்தின்
இயக்குனர், ஆசிரியர்கள் மற்றும் பணிபுரியும் ஊழியர்கள்.



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்